# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஞு மேமீ 23உ [ந. 96

## மதராஸ் மாகாண வாசிகளுக்கு மேன்மை தங்கிய வைஸ்ராயின் செய்தி.

"நம்மெள் யாவருக்கும் மிகக்கவலையும், ஆவலும் ஏற்படக்கூடிய இந்நாளில் மதருஸ் முதல் ஸ்தானத்திலிருக்கிறது. இம்மாகாணத்தில் கையாளப்பட்டிருக்கும் பிரச்னைகளை நேரில் பார்க்கவும், அப்பிரச்னைகளைக் காரியாம்சையில் செய்து வருவோர்களைப் பார்த்துத் திருப்தி கொள்ளவும் விரும்பினேன். உங்களுக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்யச் சித்தமாக இருக்கிறேன். இம்மாகாண வாசிகளுடன் பல வருஷங்களாக இருந்துவரும் நட்பை விருத்திசெய்து கொள்ளவும் விரும்பினேன்.

"எனது பிரயாணத்தை மிகச்சுருக்கமாகச் செய்யவேண்டியிருந்தபோதிலும் கிடைத்த அவகாசத்திற்குள் சென்னை வாசிகள் தைரியமாக நிற்பதைப் பார்க்க மகிழ்கிறேன். அவர்களின் உணர்ச்சியில் எனக்கு நம்பிக்கை யிருக்கிறது. இம் மாகாணப் பாதுகாப்பு விஷயத்தில் அவர்கள் நிச்சயம் சிரமம் எடுத்துக்கொள்வார் களென்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. தேவை ஏற்பட்டவுடன் தகுந்த விதமாயும் நடந்துகொள்ளுவார்கள்.

"இங்கே செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு முறைகளையும் பார்வையிட்டேன். வரவர விருத்தியாகிக் கொண்டும் போகின்றன. அவ்வித முறைகளை விருத்தி செய்து பலப்படுத்த நிச்சயம் உதவியளிக்கப்படும். பொதுஜனப் பாதுகாப்பு முறைகளும், விமானப் பாதுகாப்பு முறைகளும் திட்டமாகவே இருக்கின்றன. பல இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் பட்டாளங்களைப் பார்த்தும் திருப்தி யடைந்தேன். இப்பட்டாளங்கள், யுத்த உணர்ச்சியுடனும், பூர்ண முஸ்தீப்புடனும் இருக்கின்றன. எதிரிக்குத் தகுந்த தடையாகவே இருக்கின்றன."

### இன்னும் செய்யலாம்.

"யுத்த முயற்சிக்காக மதருஸ் மாகாணம் அறிய தொண்டு புரிந்திருக்கிறது. இன்னும் செய்யலாம். அவ்விதம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். தேசீய யுத்த முன்னணி என்ற பெரும் கோட்டையை முழுமனதுடன் எழுப்பி எதிரிக்குத் தகுந்த தடையைச் செய்யவேண்டும். அதற்காக நாம் ஒன்று பட்டு நிற்கவேண்டும். இம்மாகாண கவர்னரும் தகுந்த விதமாகத் தலைமை வகித்து வருகிறார். தற்சமயம் உங்களுடைய தேசத்திற்கும், உங்களுடைய வீடு வாசல்களுக்கும் தான் ஆபத்து வந்திருக்கிறது. அதற்காக யாவரும் உடனே முன்வரவேண்டுமென்று அழைக்கப்படுகிறீர்கள். ஒருவர் கூட தயங்கக்கூடாது. ஒற்றுமைபட்டு யாவரும் நிற்போம். இம்மாகாணத்தின் பூர்வ சரித்திரத்திலிருந்து நான் இவ்விதம் கூறிய மொழிகள் பயன்படுமென்றே நினைக்கிறேன்."

# 'தேசீய யுத்த முன்னணி'

## I

## 'வெற்றியடைவதற்கான மனப்பான்மையை உண்டாக்குங்கள்.'

மேமீ 16உ தேசீய யுத்த முன்னணியை ஆரம்பிக்கும்போது மேன்மை தங்கிய பம்பாய் கவர்னர் சொன்னதாவது :— "இதுவரை கப்பற்படைக்கும், சைனியத்திற்கும், விமானப்படைக்கும், தொழிற்சாலைகளுக்கும், போக்குவரத்திற்கும் பலத்தை சேகரிப்பது என்பதைப்பற்றி யாவருக்கும் தெரியும். அதைப் போலவே எதிரியின் தோல்விக்காக எல்லா ஜனங்களும் சாதகமான மனப்பான்மையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதும் அவசியம். இவ்விஷயம் மற்றவைகளைப்போல் அத்தியவசியமென்றே சொல்லாம்.

"தேசீய யுத்த முன்னணி அதிகமான வேலைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. மாகாணத்தின் ஒவ்வொரு பாகத்திலும் இதை ஸ்தாபிக்கவேண்டும். இது சம்பந்தமான கூட்டங்களிலும், பத்திரிகைகளைப் பிரசுரிப்பதிலும் யாவரும் ஈடுபட்டு நடத்தவேண்டும்.

"இக்கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை ஒவ்வொருவரும் செல்லுமிடங்களிலெல்லாம் பிரசாரம் செய்யவேண்டும். தொழிற்சாலையோ, சந்தைகூடுமிடமோ, கிராமங்களில் முச்சந்தியோ, மோட்டார், ரயில்வண்டிகளிலோ, ஹோட்டல்களிலோ, தெருக்களிலோ, தனது வீட்டிலோ ஒவ்வொருவரும் பிரசாரம் செய்யவேண்டும். தனி நபர்கள் இவ்விதம் ஈடுபடுவதுதான் மிகவும் சாதகத்தைத்தரும்."

### தைரியம் வேண்டும்.

"தற்போதுள்ள நிலைமை இம்மாகாணத்தில் மீண்டும் இருக்குமென்று நான் வாக்குறுதி கொடுக்கமுடியாது. இருந்தாலும் நமது தைரியத்திற்கு ஒரு நாளும் ஆபத்தில்லாமல் பார்த்துக்கொள்ளலாம். எதிரியை எதிர்த்தடிக்கவேண்டும் என்ற மனப்பான்மையை விருத்தி செய்து கொள்ளுவோம். நேசநாட்டின் பலம் தான் மிஞ்சியிருக்குமென்றும், தர்மமான காரணங்களுக்காகச் சண்டையிடும் நாடுகள் வெற்றி பெறுமென்றும் நிச்சயம் நம்பியிருப்போம்.

"தேசீய யுத்த முன்னணியில் சேருவோருக்கு அதன் நோக்கங்களில் நம்பிக்கைவேண்டும். நாஸிகளையோ, பாஸிஸ்டு கக்ஷியினரையோ கண்டித்துப் பேசாதவர்களுக்கு இங்கே பிரவேசமில்லை. இந்த யுத்தத்தில் யார் வெற்றி பெற்றாலும் பல தலைமுறை வரை அந்நாடுகள்தான் பலம் பெற்றிருக்குமாதலால் நாம் வெற்றிபெறுவதற்காக முயலவேண்டும்."

### எல்லாவிதமான எதிரித் தாக்குதலையும் எதிர்க்கவேண்டும்.

"தனது பக்கத்தில், ஸ்வதந்திரம், கௌரவம், நம்பிக்கை முதலியவைகள் இருப்பதாக நிச்சயப்படுத்திக்கொண்டே தேசீய யுத்த முன்னணி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. யுத்தரங்கத்தில் போர்வீரர்கள் எதற்காக மடிகிறார்களோ அதைத் தான் பொதுமக்களும் சாதிக்கப்பார்க்கின்றனர்.

"நேசநாடுகள் யாவும் இந்த யுத்த முன்னணிக்கு உதவி செய்கின்றன. நீங்களும் அத்துடன் சேர்ந்துகொண்டு தந்திரமாகவோ, கொடுமையாகவோ, எதிரி செய்யும் தந்திர முயற்சிகளையோ கொடுமைகளையோ எதிர்த்து வெற்றிபெற முன்வாருங்கள்."

II

# தேசீயப் பாதுகாப்பு முன்னணியில் சேருங்கள்.

---

## எதிரியைத் தாக்கும் நோக்கத்தை விருத்தி செய்யுங்கள்.

1. தேசீய உணர்ச்சி, தேசத்தின் கௌரவம், தேசத்தின் க்ஷேமம் இவைகளுக்காக நீங்கள் யாவரும் உடனேயே தேசீய யுத்த முன்னணியில் சேரவேண்டும்.

2. நாம் உறுதியுடன் இருப்பதும், தாய் நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு நாம் அவஸ்தைப்படுவதும் நமக்குக் கௌரவத்தைத் தரும்.

3. பிரிடன், ருஷ்யா, சைனு முதலிய தேசத்துமக்கள் எதிரியின் பூரா தொந்தரவிற்கு உட்பட்டும், தைரியமாகவே காணப்படுகின்றனர். அவர்களைப் போல் இந்தியரும் நடந்துகொள்ளலாம். பொறுமையுடன் சகித்துக்கொள்ளுவது தான் இந்தியரின் பலமாக இருந்திருக்கிறது.

4. இந்தியாவின் பாதுகாப்பிற்காக சைனு தனது படைகளை அனுப்பி இருக்கிறது. இவ்விதம் இந்தியா தனக்குச் செய்யப்பட்ட கௌரவத்திற்கேற்ற வாறு நடந்துகொள்ளவேண்டும். ஜப்பானை எதிர்க்கும் விஷயத்தில் சைனுவுடன் கூட இந்தியா சேர்ந்துகொண்டிருக்கிறது.

5. நாஸிகளுக்கோ, பாஸிஸ்டு கக்ஷியினருக்கோ, ஜப்பானியருக்கோ, இந்தியர்கள் தயவு காட்டக்கூடாது. ஆக்கிரமண ஆசைகொண்ட நாடுகளின்மேல் இந்தியா வெறுப்புக் கொண்டிருக்கிறது. உலகத்தின் பத்திரத்திற்காகவும், நீதி வழங்குவதற்கும் இந்தியா பாடுபடுகிறது. தற்போது எவ்வித சிரமங்களிருந்தாலும், நேச நாடுகளான பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா, சைனு முடிவில் வெற்றிபெறுமென்றும் இந்தியர்களுக்குத் தெரியும். தனது முன் சரித்திரத்திற்கும், வருங்காலத்திற்கும், தனது கௌரவத்திற்கும், உகந்தவாறு, ஸ்வதந்திரத்திற்காகப் புரியப்படும் இந்த உலக யுத்தத்தில் நடந்துகொள்ளுவதெனத் தீர்மானித்திருக்கிறது.

## கலவரம் வேண்டாம்.

1. தனக்கு உதவி செய்யுமென்று நினைத்து எதிரி கலவரத்தையும் பயத்தைச் செய்யும் பிரசாரத்தையும் செய்கிறுன். ஜாக்ரதை. இதைப் பரவச் செய்கிறவர்கள் யாவரும் எதிரியின் ரகசிய ஏஜெண்டுகளாக ஆகிறுர்கள். அவைகளுக்கு ஒருவரும் வசமாகவேண்டாம்.

தோல்வி ஏற்படுமோ என்ற சிந்தனையே கலவரத்தைச் செய்யும். எதிரியைத் தாக்கும் எண்ணத்தையும் தளரச் செய்யும்.

1. பொதுமக்களின் ஒற்றுமையைக்கெடுத்து அமைதியின்மையை அதிகப் படுத்தும்.

2. எதிரியைத் தோற்கடிக்கும் முயற்சியைக் கெடுக்கும்.

3. சைனியத்திற்கு அனுப்பப்படும் யுத்த சாமான்களின் ஸப்ளையைத் தடுக்கும்.

ஆகவே கலவரப்படுவதால் பயனே இல்லை. பயத்தைத்தான் உண்டு பண்ணும்.

## தேசத் தற்காப்பிற்கு பின்வருமாறு உதவுங்கள்.

1. எல்லா ஜனங்களிடையே ஒற்றுமையையும் அமைதியையும் விருத்தி செய்யுங்கள்.

2. அரசாங்கத்தாரின் யுத்த முயற்சிக்கு உதவுங்கள்.

3. தைரியத்தையும் நம்பிக்கையையும் நிலைநாட்டிக்கொள்ளுங்கள்.

4 கலவரத்தைப் போக்கடியுங்கள். பயத்தை உண்டுபண்ணக்கூடிய பேச்சு, நினைப்பு, எழுதுவது, வதந்தி முதலியவைகளைப் போக்கடியுங்கள். எதிரியின் பிரசாரத்தை நம்பக்கூடாது.

5. அரசாங்கத்தாருடன் ஒத்துழையுங்கள். அதை மறுத்தால் அரசாங்கத்தாரின் வேலை அதிக சிரமமாகும். தேசியப் பாதுகாப்பும், தேசத்தின் க்ஷேமமும் தான் முதலாவதான நோக்கங்களாக இருக்கவேண்டும். வெற்றியடையும் வரை இந்நோக்கம் காணப்படவேண்டும். தங்கள் சொந்தக் கொள்கைகளை மாற்றிக்கொள்ளாமலேயே தேசியப் பாதுகாப்பு முன்னணிக்கு உதவி செய்யலாம்.

6. ஐந்தாம் படையினரிடம் வசமாகாமல் ஜாக்ரதையாக இருங்கள். எதிரியுடன் நாம் சண்டை செய்யும்போது நமக்குள் காணப்படும் துரோகிகளையும் நாம் வைத்துக்கொள்ளமுடியாது.

---

**பிரஸங்கம் XCVI.**

# ஜெர்மனி துருக்கியில் செய்யும் பொய்ப்பிரசாரம்.

ஐரோப்பாவில் சில நாடுகள் நடுநிலை நாடுகளாக விடப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் உண்மையில் நடுநிலையை வகிக்கவில்லை. போர்ச்சுகல், ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து, துருக்கி முதலியவைகளைத்தான் நடுநிலை நாடுகள் என்று சொல்லலாம். லிஸ்பன், ஸ்டாக்ஹோம், பெர்னி, அங்காரா என்ற இவைகளில் நான்கு முக்கிய பட்டணங்களில் இருந்து வரும் அச்சு நாட்டுப் பத்திரிகை நிருபர்களும், நேசநாட்டுப் பத்திரிகை நிருபர்களும் அங்கு நடக்கும் விஷயங்களைப்பற்றி சுயேச்சையுடன் தெரியப்படுத்தலாம். அங்குள்ள சில உள்நாட்டு நிருபர்களுக்கும் இச் ஸ்வதந்திரம் உண்டு.

பிரான்ஸ், இதாலி, ஸ்பெயின், வடஆபிரிக்கா இங்கிருந்து கிடைக்கும் செய்திகளுக்கு நேசநாட்டு நிருபர்கள் லிஸ்பனில் இருக்கிறார்கள். லிஸ்பனிலிருந்துதான் வட அமெரிக்கா, பிரிடன், மேற்கு, தெற்கு ஆபிரிக்கா முதலிய இடங்களிலிருந்து கிடைக்கும் செய்திகளை அச்சுநாட்டு நிருபர்கள் அடைகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், ஆங்காங்கு வரும் பத்திரிகைகளைச் சீக்கிரமாகவே லிஸ்பனில் பெறலாம். அத்துடன் பிரயாணிகளிடமிருந்து சில தகவல்களும் கிடைக்கும். ஜெர்மனிக்கும், ருஷ்யாவுக்கும் ஸ்டாக்ஹோமிலிருந்து தகவல்கள் கிடைக்கின்றன. ஏனென்றால் ஸ்வீடிஷ் பத்திரிகைகளுக்குத்தான் எல்லா அயல் நாடுகளிலும் நிருபர்கள் இருக்கிறார்கள். தற்சமயத்தில் ஸ்வீடனில் கொஞ்சம் பணப்புழக்கம் அதிகமிருப்பதால் அதிகமான சம்பளம் கொடுத்து, கம்பியில்லாத் தந்தி கட்டணங்களைக் கொடுத்தும் நிருபர்களை வைத்துக்கொள்ளமுடிகிறது. இதே விதமாக மத்திய ஐரோப்பியத் தகவல்கள் பெர்னியிலிருந்து வெளிவருகின்றன. ஆனால் இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் அங்காராதான் மிகவும் முக்கியமானது. அத்துடன் இஸ்தான்புல்லையும் நாம் சேர்த்துக்கொள்ளலாம்.

## அரசியல், ராணுவ முக்கியத்துவம்.

அயல்நாட்டு நிருபர்களுக்கு துருக்கி ஏராள வசதியளிக்கிறது. அரசியல் சம்பந்தப்பட்டவரையில் அதன் அமைப்பினால் இந்த யுத்தம் பூராவாக உண்மையான நடுநிலை நாடாக இருந்துவருகிறது. துருக்கியை பலாத்காரமாக சண்டையிலிழுக்க யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகள் முயற்சித்தன. ஆனால் பலாத்காரம் கடுமையாக இல்லை. உலகில் எல்லா நாடுகளுடனும் முக்கியமாக ஐரோப்பிய நாடுகளுடனும் மத்தியக்கிழக்கு நாடுகளுடனும் அரசியல் சம்பந்தத்தை வைத்துக்

கொண்டிருக்கிறது. எல்லா நாடுகளுடனும் வியாபாரம் செய்துவருகிறது. காரியாம்சையில் இல்லாதபோனாலும் வியாபாரிகள் துருக்கிக்கு வந்துபோகிறார்கள் என்றும் தெரிகிறது.

பிரதேச அமைப்பைப் பார்க்கும்பொழுது ஐரோப்பாவின் தென்கிழக்கிலும், டொடிகானீஸ் தீவுகளிலும், மத்தியக் கிழக்கு நாடுகள் பூராவிலும் துருக்கி ஒரு முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. இந்த நாடுகளுடனும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்துடனும்தான் துருக்கிக்குப் பிரத்யேகமான, வியாபார சம்பந்தம் இருந்து வருகிறது.

மற்ற நாடுகளுடன் கம்பியில்லாப் போக்குவரத்தும் இருந்துவருகிறது. அங்காராவில் ரேடியோ நிலயம் ஒன்றுமிருக்கிறது. இவைகளின் உதவியால் அமெரிக்க ஒலிபரப்பு நிலயங்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளமுடியும். ஆகவே அங்காராவில் இருந்துகொண்டே பால்கன் சண்டை, கிரீட் சண்டை, இராக் கலகம், ஸிரியா விஷமம், இரான் ஆக்கிரமணம் இவைகளைப்பற்றி சரியான தகவல்களைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

நேசநாட்டு நிருபர்களைப் போலவே அச்சுநாட்டு நிருபர்களுக்கும் துருக்கி உபயோகமாக இருந்தது. மத்தியக் கிழக்கு நாடுகளுக்கும், அச்சு நாடுகளுக்கும் அரசியல் சம்பந்தம் முறிந்ததால் அச்சுநாட்டு நிருபர்கள் துருக்கியிலிருந்துகொண்டுதான் செய்திகளை அனுப்பமுடிந்தது. அச்சுநாட்டு நிருபர்களுக்கும் துருக்கியில் எல்லாவித சௌகரியங்களும் இருந்தன.

## துருக்கியின் ஒழுங்கு.

துருக்கியில் பிரசுரத்தடையே கிடையாது. சில சமயத்தில் துருக்கிக்கு கம்பியில்லாதத் தந்தி மூலம் வரும் செய்திகள் தாமதித்து வருகின்றன. பயத்தை விளைவிக்கும் செய்திகள் பரவாமல் செய்யப்படுகின்றன. ஆனால் தேசத்திற்கு எந்தச் செய்திகள் பயத்தை விளைவிக்கும் என்பதைப்பற்றி வெவ்வேறு விதமான அபிப்பிராயங்கள் காணப்படலாம். அனுபவத்தில் பார்க்கும்பொழுது துருக்கி அதிகாரிகள் மாறுபாடாக நடந்துகொண்டதில்லை என்று தெரிகிறது. இது சம்பந்தமாக துருக்கியர்களுக்கு சில சிரமங்கள் இருந்தன. துருக்கி மூலமாக வெளிநாடுகளுக்குச் செல்லும் தகவல்கள் எவ்வாறு பிரசுரிக்கப்படுகின்றனவென்று முன்னாடியே தெரிந்துகொள்ளமுடியாது. ஆனால் தங்களிடமிருந்து நிருபர்கள் பெற்றுக்கொள்ளும்போது பயத்தை உண்டுபண்ணாத செய்திகள்தான் கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக 'இஸ்தான்புல் முற்றுகையிடப்பட்டிருக்கிறது' என்று காணப்பட்டால் இத்தகவல் பரவலாமா, கூடாதா என்று நிர்த்தாரணம் செய்ய அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு. இது ரொம்ப சிரமமான வேலையாய் இருந்தாலும், யுத்த நிலைமையில் இந்த சிரமத்தைப் பொருக்கத்தான் வேண்டும்.

## புது தந்திரம்.

இதுவரை சொன்ன முன்னுரையின் அவசியம் இனிமேல்தான் தெரியவரும். ஏனென்றால் துருக்கியில் ஜெர்மானியரால் செய்யப்படும் பிரசாரம் இரண்டு வழிகளால் வெளி உலகத்திற்கு அனுப்பப்படுகிறது. ஒன்று பத்திரிகைகள் மூலமாயும், மற்றொன்று வியாபாரம், வெளியேற்றம், உல்லாசம் முதலியவைகளுக்காகப் பிரயாணம் செய்யும் மனிதர்கள் மூலமாகவும் பரவுகிறது. பொய்ப் பிரசாரங்கள் பரவாதவண்ணம் துருக்கி அரசாங்கத்தார் செய்துவருகின்றனர். ஆனால் ஒவ்வொரு பத்திரிகை நிருபரும் ஒரு கதையைக் கேட்டதும், அதன் குணதோஷங்களை அறியாமல் அப்படியே பிரசுரித்துவிடுகிறான்.

பிரசாரம் சம்பந்தப்பட்டவரையில் ஜெர்மனி முதல் ஸ்தானத்தை வகிக்கிறது. துருக்கியிலும் அவ்வித பிரசாரத்தை நடத்திவருகிறது. ஏனென்றால் எந்த நாடு முன்னேறிக்கொண்டே செல்லுகிறதோ அந்த நாடு செய்யும் பிரசாரத்திற்குக் கொஞ்சம் செலாவணி இருக்கும். அடுத்தபடியாக ஜெர்மன் பிரசார மந்திரி சபையின் விருப்பப்படிதான் பத்திரிகைகளும் பிரசாரத்தை நடத்துகின்றன.

இங்கிலாந்து முதலிய நேசநாடுகளிலோ பத்திராதிபர்களின் நோக்கங்களுக்கு ஏற்றவாறுதான் அபிப்பிராயங்கள் வெளியிடப்படுகின்றன. இதில் இங்கிலாந்தில் ஒன்றுக்கொன்று போட்டி ஏற்படுவதும் உண்டு.

துருக்கியில் ஜெர்மன் பிரசாரத்திற்கு இரண்டுவிதமான நோக்கங்கள் இருக்கின்றன. துருக்கி பொதுமக்களை ஜெர்மானியர்மேல் பற்றுள்ளவர்களாகச் செய்வது ஒன்று. இரண்டாவதாக பொய் வதந்தியைப் பரவி அவைகளை உண்மையென்று உலகத்தார் யாவரும் நம்பும்படி செய்வது.

## ஏஜென்ஸி அனடோலி.

முதலாவதான துருக்கி பொதுமக்களை வசப்படுத்தும் லக்ஷியம் சம்பந்தப்பட்ட மட்டில் சரியான பலன் கிடைக்கவில்லை. ஏனென்றால் இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் துருக்கி கவர்ன்மெண்டார் போட்ட உத்தரவுப்படி துருக்கி பத்திரிகைகளுக்கு அயல்நாட்டு நிருபர்கள் இருக்கக்கூடாது. இவ்வுத்தரவை எல்லாப்பத்திரிகை ஆசிரியர்களும் ஒப்புக்கொண்டார்கள். அயல்நாட்டுச் செய்திகள் பூராவும் அனடோலு ஏஜென்ஸி (Anadolu Ajansi) என்ற கம்பெனி மூலமாகத்தான் கிடைக்கும். இது தற்சமயத்தில் துருக்கி கவர்ன்மெண்டாரின் மேல் பார்வையில் நடந்து வருகிறது. இக்கம்பெனிக்குத்தான் தேவையிருக்கும் போது அயல்நாடுகளுக்கு நிருபர்களை அனுப்பும் ஸ்வதந்திரம் உண்டு. இதுவரையில் இப்பத்திரிகையின் நிருபர்கள் லண்டன், பெர்லின், கெய்ரோ இம்மூன்று இடங்களிலும் இருக்கிறார்கள். டஹ்ரானுக்கும் கூடிய சீக்கிரத்தில் ஒரு நிருபர் அனுப்பப்படுவார்.

இக்கம்பெனியின் வேலை சுலபமானதல்ல. நேசநாடுகள் மூலமாயும், திருட்டுத்தனமாயும் ஏராளமான செய்திகள் தினம் இவர்களுக்குக் கிடைக்கும். அவைகளில் உண்மையானவைகள் பொருக்கப்பட்டு பிரசுரிக்கப்படும். வேறுவிதமாகக் கிடைக்கும் அயல் நாட்டுச் செய்திகளை பிரசுரிக்கக்கூடாது. இக்கம்பெனியிலிருந்து கிடைக்காதவரையில் ஒலிபரப்புகளையும் அச்சிடக்கூடாது. ஏனென்றால் பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்திற்கும் ஹவாஸ் டெலிமாண்டியல் அறிக்கை அதிகாரிகளுக்கும் இக்கம்பெனியுடன் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஹவாஸ் டெலிமாண்டியல் அறிக்கைகள் மற்ற பத்திரிகைகள் வெளிவந்தவுடன் காலையில் பிரசுரப்படுத்தப்படுகின்றன. விசேஷ செய்திகளெல்லாம் இவ்வறிக்கையில் பிரசுரிக்கப்படும். இவ்வறிக்கைகளில் காணப்படும் விஷயங்கள்தான் இஸ்தான்புல்லில் மத்தியானத்தில் வெளிவரும். ஆகவே துருக்கிப் பத்திரிகைகளை ஸ்வாதீனப்படுத்த ஜெர்மானியர்களுக்கு அதிக சிரமமாய்விட்டது.

## ஜெர்மன் தந்திரம்.

குறைவான சந்தர்ப்பங்களுக்கு இடையே ஜெர்மானியரும் முடிந்தவரை முயற்சித்துப் பார்க்கின்றனர். பத்திரிகை ஆசிரியர்களுக்கு நேசநாட்டு செய்தியானாலும், அச்சுநாட்டு செய்தியானாலும் ஒரே விதமாகத்தான் பிரசுரிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. உதாரணமாக இஸ்தான்புல்லில் டர்க்கிஷ் சி போஸ்ட் என்ற ஜெர்மன் பத்திரிகையும், விஷி பிரெஞ்சு பத்திரிகை ஒன்றும் இருக்கின்றன. ஜெர்மன் பத்திரிகையில் ஜெர்மன் செய்திகள் பூராவும் பிரசுரிக்கப்படுகின்றன. ஊர்ஜிதமான பிறகே பிரிடிஷ் நஷ்டங்களும், தோல்விகளும் கொடுக்கப்படுகின்றன. மற்றொரு பத்திரிகையில் ஜெர்மன் செய்திகளுக்கு அதிக பிரதானியம் கொடுக்கப்படுகிறது. இன்னும் சில பத்திரிகைகளுக்கு ஜெர்மன், இதாலியர் இன்னும் இதர அச்சுநாட்டினர் இவர்களின் சந்தாதார்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதாகச் சொல்லி ஜெர்மன் செய்திகளை அதிகம் கொடுக்கப்படுகின்றன. ஆனால் இவைகளையெல்லாம் கொண்டு பொதுமக்களை வசப்படுத்த முடியாது. ஏனென்றால் உண்மைகள் இப்பத்திரிகைகள் மூலமாக வெளிவராது. விஷயமறிந்தவர்களுக்கு இப்பத்திரிகைகளில் வருபவைகள் வேடிக்கைகளாகக் காணப்படும். ஆகவே உண்மையைப் பிரசுரிக்கும் வேறு பத்திரிகைகளைத் தான் வாங்குவார்கள்.

ஆகவே துருக்கியில் ரகசியப் பிரசாரத்தையே ஜெர்மானியர் முக்கிய கருவியாக உபயோகித்து வந்தனர். முதலில் எங்கிருந்து பிரசாரம் உற்பத்தியாகிறதென்பதே தெரியாது. ஆனல் சிறிது நாட்களில் உற்பத்தி செய்தவனைப்பற்றிய விவரங்கள் கிடைத்துவிடும். துருக்கியில் முக்கியமாக இஸ்தான்புல், ஸிமிர்ணு என்ற இடங்களில்தான் இப்பிரசாரம் அதிகமாகச் செய்யப்படுகிறது. அவை இரண்டும் பெரிய நகரங்கள். வியாபார ஸ்தலங்கள். எல்லா வகைப்பட்ட ஜனங்களும் வசிக்கிறார்கள். அதிகமாக சிறு ஜாதியினரும், லவான்டைன் என்பவர்களும் அதிகம் இருக்கிறார்கள். லவான்டைன் என்பவர்கள் துருக்கியில் பல வருஷங்களாக வசித்துவருகின்றனர். இவர்களுக்குக் கொடுக்கப்படும் காபந்தினலும், விவாக சம்பந்த உரிமைகளாலும் சில சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. லவான்டைன் என்பவர்கள் ஜெர்மன் புருஷர்களுக்கும், ஸர்க்காஸியன் (Circassian) ஸ்திரீகளுக்கும் பிறந்தவர்களென்று தெரியவருகிறது.

## துருக்கியின் சிறு ஜாதியினர்.

துருக்கியிலுள்ள எல்லா சிறு ஜாதியினருக்கும் துருக்கியர்கள் மேல் மனஸ்தாபம் கிடையாது. அதுபோலவே துருக்கியர்களுக்கும் அவர்கள்மேல் வெறுப்பு கிடையாது. ஆனல் பொருளாதார காரணங்களை முன்னிட்டு சிறு ஜாதியினர் பரஸ்பரம் சண்டையிட்டுக்கொள்ளுகின்றனர். துருக்கியர்களுக்கு விரோதமான ஜாதியினர் ஆர்மீனயப் பிரதேசத்தில் அதிகம் இருக்கின்றனர். இவர்கள் சென்ற யுத்தத்தில் பிரிடிஷ்காரர்களுடன் சேர்ந்திருந்தனர். அந்த சமயத்தில் சமயத்திற்கு ஏற்றவாறு பிரிடிஷ்காரர்களைப்பற்றி அவதூராகப் பேசியும்வந்தனர்.

இந்த யுத்தத்தில் துருக்கியர் நேசதேசங்களைப் பின்பற்றுவதால் இவர்கள் பிரிடிஷ்காரர்களுக்கு விரோதமாக நடந்துவருகிறார்கள், ஆர்மீனயர் என்பவர்கள் பெரிய வியாபாரிகள். இவர்களுக்கு மத்தியக்கிழக்கு நாடுகளில் சம்பந்தம் உண்டு. இஸ்தான்புல்லில் பிரிடிஷ்காரர்களுக்கு விரோதமான செய்திகளைச் சேகரித்துக்கொண்டு மத்தியக்கிழக்கு நாடுகளுக்குள் பரவவிடுகின்றனர். அதைப் போல அவ்வித செய்திகளை உள்நாட்டிற்குக் கொண்டுவந்து ஜெர்மானியரிடம் கொடுத்து உபயோகிக்கச் செய்கின்றனர். கிரேக்கர்களும் யூதர்களும் பிரிடிஷ்காரர்களுக்கு விரோதமாக நடந்துகொள்ள முடியாது. ஆதலால் அவர்களால் யாதொரு பயமும் கிடையாது.

பொருளாதாரத்தில் சிரமம் ஏற்பட்டால் சிறு ஜாதியாரிடமிருந்து தொந்தரவு ஏற்படும். லாஸேன் ஒப்பந்தத்திற்குப் பிறகு துருக்கியில் பொருளாதார நிலை ஸ்திரமானதால் பெரிய நகரங்களில் ஆர்மீனியர்கள், யூதர்கள், கிரேக்கர்கள் தான் வியாபாரத் தொழில் நடத்துகிறார்கள். ஆர்மீனியரானலும் சரி, வேறு யாரானலும்சரி ஒழுங்காக நடந்துகொள்ளும்வரை ஒரு தொந்தரவும் இல்லை. ஆனல் சிறு ஜாதியினர் அதிக ஸ்வதந்திரங்களை உடனே வேண்டுமென்று கேட்கிறார்கள்.

## பயத்தின்மேல் வியாபாரம்.

இவ்விதம் துருக்கியில் பிளவு இருக்கிறதென்பதை ஜெர்மானியர் அறிந்து கொண்டார்கள். ஆர்மீனியரிடம் போய் துருக்கியின் வழியாக எங்களுடைய சைனியம் செல்லவேண்டும், என்று ஜெர்மானியர் சொன்னவுடனேயே ஆர்மீனியர் குதூஹலிக்கிறார்கள். இத்தகவலை யூதர்களிடம் பரவச்செய்தவுடன் அவர்கள் கலவரப்பட்டு தங்கம் முதலியவைகளை வாங்கி சேமிக்கிறார்கள். விலைவாசிகள் ஏறிவிடுகின்றன. கிரேக்கர்கள் மனஸ்தாபப்படுகிறார்கள். உடனே இதைப்பற்றி துருக்கியர் விசாரிக்க ஆரம்பிக்கின்றனர். காரியகாரணங்களுடன் வதந்திகள் பலவிதமாகவெல்லாம் உல்லாவுகின்றன. அயல்நாட்டு நிருபர்கள் இவைகளைப்பற்றி பத்திரிகைகளில் அச்சிடும்போது 'தகவல் சரியான இடத்திலிருந்து கிடைத்தது' என்று அச்சடித்துவிடுகிறார்கள். வதந்தி செய்தியாகிவிடுகிறது. போஸ்டன், டிம்பக்டூ முதலிய இடங்களிலிருந்து ஒலிபரப்பவும்படுகிறது. துருக்கியர்கள் நம்புகின்றனர். லவான்டைன் என்பவர்களும் செய்திகளைத் தெரிந்தோ, தெரியாமலோ பரவச் செய்வதில் சமர்த்தர்கள். இதுதான் ஜெர்மானியர் செய்துவரும் பிரசாரத்தின் ஒரு உதாரணம்.

## கட்டுக்கதைகள்.

இவை இரண்டுவிதமாக உண்டாகின்றன. இதன்படி மூன்ருவது நாட்டில் நடக்கும் விஷயத்தைப்பற்றி ஒரு நாடு மற்ருெரு நாட்டுக்கு எடுத்துச் சொல்லு கிறது. உதாரணமாக அனடோலியாவிலுள்ள அனடா என்ற பட்டணத்தில் ஒரு ஜெர்மன் நிருபர் நியமிக்கப்பட்டிருக்கிருன். இவன் மத்தியக்கிழக்கு, இரான், இந்தியா முதலிய நாடுகளைப்பற்றிய செய்திகளைச் சொல்லுகிருன்.

எகிப்தில் கலகம் ஏற்பட்டதாயும், சாம்ராஜ்யப் படைகளுக்குள் கலகங்கள் ஏற்பட்டதாயும், இராக்கில் சூழ்ச்சிகள் நடப்பதாயும், கேபிள் மூலம் செய்தி அனுப்புகிருன். சிறிய சம்பவங்களை பெரிய கலகங்கள் என்று குறிப்பிடுகிருன். உதாரணமாக இரானில் சில கலகக்காரர்களும், குதிரையாட்களும் இருக்கின்றனர். இவர்கள் அங்கிருந்து செய்திகளை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லு கின்றனர். இவர்களை ஒருவராலும் தடுக்கமுடியாது. டஹ்ரானில் நடந்த ஒரு விஷயத்தைப்பற்றி இவர்கள் சொல்லும்பொழுது இரானில் ஒரு கலகம் ஏற்பட்டதாகவோ, பிரிடிஷ்காரர்களுக்கும், ருஷ்யர்களுக்கும் சண்டை ஏற்பட்ட தாகவும் சொல்லிவிடுகின்றனர். இந்தியாவைப்பற்றியும் இதுவேதான் சொல்லப் படுகின்றது. ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்தியாவுக்கு வரப்போகிருர் என்ற தகவல் எட்டியவுடன் இந்தியா பூராவிலும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது என்று ஜெர்மானியர் அனடா நகரத்திலிருந்து செய்தி அனுப்புகின்றனர்.

இது மாதிரியான தகவல்கள் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் பரவுகின்றன. இவைகளைக்கொண்டு பிரிடிஷ் சாம்ராஜ்யம் சிதைந்து வருகிறதாகவும், பிரிடிஷார் யுத்தத்தில் தோற்றுவிடுவார்கள் என்றும் பொய்பிரசாரம் செய்யப்படுகிறது. இல்லாவிட்டால் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சத்தைக் குறிப் பிடாமல் இந்தியாவைப்பற்றி மாத்திரம் ருமேனியப் பத்திரிகைகளும் க்ரோட் பத்திரிகைகளிலும் சொல்லக் காரணமில்லை. இம்முறைகளுக்கு ஜெர்மானியர் தங்களுடைய சொந்த நிருபர்களையே உபயோகித்து வருகின்றனர்.

## தந்திர முறைகள்.

முன்பு சொன்னதைக்காட்டிலும் சிரமமான மற்ருெரு முறையையும் ஜெர்மானியர் பின்பற்றுகின்றனர். இம்முறையில் ஏற்படும் வதந்திகளை யார் உண்டாக்கினர் என்றும், எப்படி செய்தியாக மாறியது என்றும், நாட்டைவிட்டு எவ்விதம் வெளிச்சென்றதென்றும், வெளிநாடுகளில் அதை ஒருவரும் செவி கொடுத்து கேட்காமல் துருக்கியர் மாத்திரம் பரவுவதற்குக் காரணம் என்னவென்றும் கண்டுபிடிப்பது சிரமம். இந்த முறையால், துருக்கியைப் பற்றிய பொய் வதந்திகளை வெளிநாடுகளில் பரவச்செய்வதும், அதே செய்தி மறுபடி துருக்கிக்குத் திரும்பிவரும்பொழுது, அதைப்பற்றிய அசட்டுத் தனத்தை வெளிப்படுத்துவதும்தான் லக்ஷியமாக காணப்படுகிறது.

இதைப்பற்றி சமீபத்தில் நடந்த திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்வோம். இந்த யுத்தம் ஆரம்பித்தது முதல் துருக்கி தனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு ஜெர்மானியருக்குச் சாதகமாக திரும்பிவிடுமென்று ஜெர்மானியர் சொல்லிவந்தனர். இங்கிலீஷ்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், துருக்கியர்கள் மூவரும் 1939-ம் வருஷம் சரத் காலத்தில் ஒரு சிநேக ஒப்பந்தம் செய்து கொண்ட சமயத்திலேயே ஜெர்மானியர் இவ்விதமாக சொல்லிவந்தனர். இவ் வொப்பந்தத்தை ஸர் ஹ்யூ நாட்ச்புல்-ஹுகிஸன் என்ற பிரிடிஷ் பிரதிநிதி, முன் நின்று ரகசியமாக துருக்கி அயல்நாட்டு மந்திரி வீட்டிற்குச் சென்று முடித்து வைத்தார்.

சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மெதுவாகவோ, உறக்கவோ, சமீபத்தில் சில நாட்கள் வரை இப்பிரசாரம் நடந்து வந்தது. ஆனல் திடீரென்று வழக்கத்தை விட கொஞ்சமாறுபாடு காணப்பட்டது. முதலில் ஆங்கிலேய-துருக்கி ஒப்பந்தம் கெட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டது. பேபன் பெர்லினுக்குச் சென்றதை

வைத்துக்கொண்டும், துருக்கி பிரதிநிதி அங்காராவிற்குத் திரும்பியதை வைத்துக் கொண்டு சில குறிப்புகள் காணப்பட்டன. ஸோபையா வழியாக பேபன் போகும்பொழுது பல்கேரியப் பத்திரிகை நிருபர்களிடம் ஜெர்மன்-துருக்கி சம்பந்தம் சிநேகமாக இருந்து வருகிறதென்றே சொன்னான். பொதுவாக ஜெர்மன் அரசாங்கம் அலாஸ்காவில் நடக்கும் ஒரு சிறு சம்பவம் முதல் அமெரிக்காவிற்கு விரோதமாக அல்பேனியா சண்டை செய்கிறது என்ற விஷயம் வரை எல்லா விஷயங்களைப் பற்றியும் பிரத்யேக அபிப்பிராயங்களைக் குறிப்பிடும்பொழுது "வான் பேபன் சீக்கிரம் திரும்பி வருவான் என்று அறியப்படுகிறது" என்று மாத்திரம் வியாக்கியானம் இல்லாமலே சொல்லிற்று. யாவருக்கும் வான் பேபன் திரும்பி வரும் விஷயம் தெரிந்தபொழுது ஏனோ இவ்விஷயத்தை ஜெர்மனி மறுபடியும் சொல்லவேண்டும். ஆனால் விஷயங்கள் இதோடு நிற்பதில்லை. சில ஆர்மீனியர்கள் ஸிரியாவுக்குச் சென்று துருக்கி திட்டத்தில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லுகின்றனர். அவர்களே துருக்கிக்குத் திரும்பி வரும்பொழுது அராபியர்கள் இம்மாறுதலை எதிர்பார்க்கின்றனர் என்றும் சொல்லுகின்றனர். சிறுது நாட்கள் கிரமித்ததும் "ஜெர்மனி துருக்கியுடன் சிநேகமாகவே இருந்து வருகிறது. அராபியர்கள் இம்மாறுதலுக்குக் காத்துக்கொண்டிருக்கின்றனர்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வதந்தி இந்நிலைமையில்தான் மாறுதலடைகிறது. ஜெர்மானியரோ, துருக்கியரோ ஏற்கனவே ஒரு சிநேக ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தால், ஏன் ஒரு மாறுதலை விரும்பவேண்டும்? இதற்குக் காரணம் என்னவென்றால் இவ்வொப்பந்தம் ஒருக்கால் ரகசியமாகச் செய்யப்பட்டிருக்கலாம். ரகசியமாகச் செய்யப்படும் ஒப்பந்தங்களை வைத்துக்கொண்டுதான் ஜெர்மன் பிரசாரம் நடந்து வருகிறது.

இந்த ரகசிய ஒப்பந்தங்களைப்பற்றி ஒருவருக்கும் தெரியாது. ஆனால் நூற்றுக்கணக்கான வதந்திகள் மாத்திரம் உலாவும். இன்னும் துருக்கியின் திட்டத்தைப்பற்றி சில ஐரோப்பியர்களுக்கு விவரங்களே தெரியாது. இதுதான் முதல் விதமான ரகசிய வதந்தி.

இவ்வதந்தி மறுபடியும் ரகசியப் பிரசார மூலம் அயல்நாடுகளுக்கு உள்ளாள் மூலமாயும், சம்பள ஆட்கள் மூலமாயும் அனுப்பப்படுகின்றனர். இவர்கள் உள்நாட்டுப் பத்திரிகைகளை முதலில் கெடுக்கப்பார்ப்பார்கள். ஹோட்டல்களில் ஊர் வம்பு அளப்பார்கள். இவர்களுக்கு பலவித பாஷைகள் தெரிவதே ஒரு சாதகம். எப்படியாவது இவ்வதந்தி நடுநிலை நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

## விஷி செய்துவரும் சாதகம்.

அமெரிக்கா இந்த யுத்தத்தில் சேரும்வரை அமெரிக்கப் பத்திரிகைகள் மூலமாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால் தற்போது அது சாத்தியமில்லாததால் விஷியிலுள்ள ஹவாஸ் ஒபி ஏஜென்ஸி, கிளர்மாண்ட் பெராண்ட் ஏஜென்ஸி மூலமாகப் பரவுகிறது. இவைகளின் மூலமாக பொய்வதந்தி கணக்கில்லாமல் பரவுகின்றன.

உதாரணமாக ஜெர்மனி-துருக்கி செய்துகொண்ட ரகசிய ஒப்பந்தம், அராபியர்களை விடுவிப்பது, இந்தியாவை பின்புறமாகவோ, ஆப்கானிஸ்தானம் மூலமாகவே தாக்குவது முதலியவைகளைப்பற்றி செய்திகள் உலாவிவந்தன. முதலில் செய்திகள் D N B ஏஜென்ஸி மூலமாயோ, வேறு கபட ஜெர்மன் ஏஜென்ஸி மூலமாயோ, விஷிக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து மற்ற பாகங்களுக்குச் செய்தி செல்லுகிறது. முன்சொன்ன செய்திகளுக்குத் தென் அமெரிக்காவில் பிரயோஜனமில்லை. ஆனால் இந்தோ-சைனாவுக்குச் சென்றவுடன் ஸெய்கோன் ரேடியோவிலிருந்து பிரஞ்சுக்காரர்கள் மூமைமாக ஜப்பானியரால் ஒலிபரப்பப்படுகிறது. இப்பிரசாரம் முக்கியமாக துருக்கியை உத்தேசித்தே செய்யப்படுகிறது. துருக்கிக்கு இச்செய்தி மறுபடி வந்ததும் அதிகமான வியாக்கியானங்களுடன்

அச்சிடப்படுகின்றன. அப்போதுதான் இந்த ரகசிய ஒப்பந்தத்தை ஜெர்மானியர் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது தெரியும்.

## கோயபல்ஸின் தந்திரம்.

ஆகவே துருக்கியைப்பற்றி அச்சுநாடுகளின் ஒலிபரப்பைக் கேட்கும்பொழுது வெகு ஜாக்ரதையாக இருக்கவேண்டும்.

தற்சமயத்தில் ஜெர்மனி வசந்தகாலத் தாக்குதலைப்பற்றிய சிந்தனையிலிருந்து வருகிறது. யாவரும் இதைப்பற்றி அறிய விரும்புகின்றனர். அந்த சந்தர்ப்பத்தில் துருக்கியைப்பற்றி கொஞ்சம் சொல்லுவதும் பொருத்தமாகத்தான் இருக்கும். சாம்ராஜ்யப்படைகள் எங்கேயாவது நகர்ந்துகொண்டே இருக்கவேண்டுமென்பது தான் ஜெர்மானியரின் கருத்து. துருக்கியைப்பற்றி ஏதாவது பிரசாரம் செய்தால் அதனால் ஏதாவது காரியம் சாதகமாகாதா என்றும் ஜெர்மானியர் எதிர்பார்க்கின்றனர்,

துருக்கி அடுத்த லக்ஷியமாக இருக்கக்கூடும் என்பதற்கான காரணங்களிருக்கின்றன. துருக்கி, கிரேட் பிரிடனுக்கு நேசநாடாக இருந்துவருகிறது. மேலும் மத்தியக்கிழக்கு, தெற்கு ருஷ்யா, காகஸஸ் முதலியவைகளைப்பற்றிய அக்கரையும் துருக்கிக்கு இருந்துவருகிறது. துருக்கி மூலமாக மத்தியக்கிழக்கு நாடுகளில் சண்டைசெய்ய சாதகமாயும் இருக்கும். துருக்கியை வேறு யாராவது தாக்கினால் அதைக் காப்பாற்ற பிரிடிஷ் சாம்ராஜ்யம் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. அத்துடன் துருக்கியின் திட்டத்தையும், பிரிடிஷ் துருப்புகளின் நிலைமையும் ஜெர்மனி அறிய விரும்புகிறது.

இவ்விதமாக ஜெர்மன் பிரசாரம் ஆரம்பமாகி மனம்போன போக்கெல்லாம் நடந்துவருகிறது. இதற்கு மாறாக ஏதோ ஒரு இடத்தை ஜெர்மானியர் தாக்கப் போகிறார்களென்றும், ஜெர்மன் பலம் ஓரிடத்தில் குறைந்துவருகிறதென்றும், ஜெர்மானியருக்கு ஏராள நஷ்டமென்றும், ஜெர்மனியில் ஒற்றுமை கெட்டுவிட்டதென்றும், ஜெர்மனியில் ஒற்றுமை இருக்கிறதென்றும், இவ்விதம் பலவிதமான வதந்திகளைக் கிளப்பி, அவர்களே மறுத்தும் வருகின்றனர். எவ்வளவு ஜாக்ரதையாக இருந்தபோதிலும், பத்திரிகைக்காரர்கள் இதைப்பற்றி குறிப்பிடத்தான் வேண்டிவரும். அயல்நாடுகளில் பரவத்தான் பரவும். ஆகவே சாமர்த்தியம் வாய்ந்தவர்கள் இவ்விதம் கிடைக்கும் செய்திகளை ஒப்பிட்டுப் பார்த்து எதுவுண்மை, எது நிஜம் என்று கண்டுபிடித்து வருகின்றனர்.

இந்த சந்தர்ப்பங்களில் உலகத்தில் காணப்படும் எல்லாப் பத்திரிகைகளும் சேர்த்து ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன. ஒரு பத்திரிகையில் இங்கொரு குறிப்பு காணப்படும். மற்றொரு பத்திரிகையில் வேறொரு குறிப்பு காணப்படும். இவைகளைச் சேர்த்துப்பார்ப்பதும், அதிலுள்ள குறைகளைத் தவிர்ப்பதும், அவைகளில் ஏற்படக்கூடிய மாறுதல்களை அடக்குவதும்தான் இவர்களின் வேலையாக இருக்கும். இந்த சந்தர்ப்பங்களில் பிரிடிஷ் பத்திரிகைகள் என்ன செய்கின்றன என்று கவனிப்போம்.

## பிரிடிஷ் பத்திரிகைகள்.

ஜெர்மானியர் பிரசாரத்தை தாராளமாக நடத்தி வரும்பொழுது பிரிடிஷ் பத்திரிகைகள் மிகவும் ஜாக்ரதையாக நடந்துகொள்ளுகின்றன. அச்சுநாட்டு நிருபர்கள் அரசாங்கத்தாரிடமிருந்து சம்பளத்தை வாங்கிக்கொண்டு இவ்வேலையில் ஈடுபடுகின்றனர். ஒரு தடவை பிரிடிஷ் பத்திரிகையில் பொய் சமாசாரத்தைப் பிரசுரித்தால் அதற்கு மறுபடி சிலாவணி ஏற்படுவது சிரமம். ஆகவே துருக்கியைப்பற்றி ஒரு விஷயம் வெளிவந்தால் பிரிடிஷ் பத்திரிகைகளில் வெளிவரும்வரை காத்துக்கொண்டிருப்பது நலம். அது உண்மையாகவே இருக்கும். அப்படிச் செய்யாவிட்டால் உலகிலுள்ள பத்திரிகைகள் எல்லாவற்றையும் வாங்கி, இரவும் பகலுமாக அவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் பிரிடிஷ் பத்திரிகைகளில் சரியான விவரங்கள் கொடுக்கப்படுகின்றன என்று தெரியவரும்.

# வார யுத்தச் செய்திகள்.

## 16—5—42-லிருந்து 22—5—42-வரை.

**சைனு.**—(1) தாய்லாந்து, இந்தோ-சைனு முதலிய இடங்களிலிருந்து மெகாங் நதி வழியாக முன்னேறிய ஜப்பானியப்படைகள் சைனுவில் புகுந்தன. லூங்லிங் கிலிருந்து வரும் படைகளும் முன்னேறிக் கொண்டேபோகின்றன.

(2) ஸால்வீன் நதியைக்கடந்து சென்ற சீன உதவிப்படைகள் எதிரிகளை டெங்சுங், லூங்லிங், மாங்ஷி பிரதேசங்களிலிருந்து விரட்டின. யுனுன் இந்தோ-சைனு இருப்புப்பாதைக்கருகில் உள்ள ஜப்பானியப்படைகளை அமெரிக்க மாலுமி கள் விரட்டியடித்தனர். ஸால்வீன் நதியின் மேற்குப் பக்கத்திலிருந்து முன்னே றும் ஜப்பானியப்படையும் திருப்பியடிக்கப்பட்டது. பயோஷானைப் பிடிக்கச் சென்ற ஜப்பானியரின் முயற்சி குயிமங், லூங்லிங், மாங்ஷி என்ற இடங்களில் சீனர்களால் தடைப்பட்டது. ஸால்வீன் நதியின் மேற்கு பாகத்தில் எதிரி நடமாட்டமே கிடையாது. யுனுனில் ஹுங்முஷு என்ற இடத்திலிருந்த ஜப் பானியப்படை டாட்ஸை என்ற இடத்தை நோக்கி ஓடுகிறது.

3. ஷான் ஸமஸ்தானத்தில் ஜப்பானியர் கெண்டங்கைத் தாக்கி மாங்லன், மாங்கெய், கோங்கும் என்ற இடங்களில் சண்டைசெய்கின்றனர்.

4. செகியாங் என்ற சீனக் கடற்கரைப் பிரதேசத்திலும் சண்டைசெய்து சுகி என்ற இடம்வரை முன்னேறியிருக்கின்றனர்.

இது கினஹ்வா என்ற தலைநகருக்கு 50-மைல் தூரத்திலிருக்கிறது. ஷெங் ஷியு என்ற இடத்தில் சீனர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்கின்றன.

5. புங்யு என்ற இடத்திலிருந்து ஜப்பானியர் விரட்டப்பட்டனர்.

6. ஹேஹ்ஷின் என்ற இடத்தில் சீனர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச் செய் கின்றனர். இது நான்கிங்கிற்கு தென்மேற்கில் 25-மைல் தூரத்திலிருக்கிறது.

**பர்மா.**—சீனப்படைகள் மியிட்கியினு என்ற இடத்திற்கு 25 மைல் தூரத்தில் வந்துவிட்டன. வாண்டிங்கையும் தாக்குகின்றனர்.

(2) ஜெனரல் பிரிடனின் தலைமையின் கீழிருந்த அமெரிக்க விமானங்கள் மெயிட்கியினுவைத்தாக்கின.

(3) மே 10வ ஜெனரல் அலக்ஸாண்டரின் படைகளை ஷெவிக்யின் என்ற இடத்தில் சூழ்ந்துகொள்ள ஜப்பானியர் பிரயத்தனம் செய்தனர். ஆனல் சாம் ராஜ்யப்படைகள் சிண்டுவின் நதியைக்கடந்து ஷ்விலோவரை முன்னேறி விட்டன. இன்னும் ஒரு சண்டையும் நேரவில்லை. பிரிடிஷ் சைனியமும் கெடுதி அடையவில்லை. சிண்டுவின் நதியைத் தாண்டி கலிவா என்ற இடத்தில் இறங்கி யிருக்கின்றன.

**தைரியமான பின்பந்தோபஸ்து.**—இத்தலையங்கத்துடன் டைம்ஸ் பத்திரிகை அலெக்ஸாண்டரின் படைக்கு ஒரு தகுந்த புகழ்ச்சி செய்திருக்கிறது.

"வெகுதூரம் சீனப்படைகளும், பிரிடிஷ் படைகளும் தற்காப்பு செய்து வந் ததால் இந்தியப் பாதுகாப்பிற்குப் போதுமான அவகாசம் கிடைத்தது.

"ஆரம்பமுதல் கடைசிவரை ஜெனரல் அலெக்ஸாண்டரின் சைனியம் அமைதியாகவே இருந்தது. ஜப்பானியர் துரத்தி வரும்போதெல்லாம் சிதறினுலும் பிறகு ஒற்றுமைப்படுத்திக்கொண்டும், பாலங்கள், கப்பல் தளங்கள், எண்ணெய்க் கிணறுகள் முதலியவைகளை உடைத்துக்கொண்டும் யுத்த சாமான்களை அழித்தும் காடு முதலியவைகளைக் கடந்துவந்தன. இல்லாவிட்டால் அவையாவும் எதிரி வசமாகியிருக்கும்."

இதைப்பற்றி C. R. அட்லி காமன்ஸ் சபையில் செவ்வாய்க்கிழமை பேசும்போது :—

'யுத்தம் வெகு சாமர்த்தியத்துடன் செய்யப்பட்டது. எதிரியை அதிகத் தாமதப்படுத்தி நமது விமானப்படைகளும், கடல், தரைப்படைகளும் வந்து சேர்ந்தன. எதிரிக்கு நமது படைகளும் சீனர்களும் ஏராள நஷ்டத்தை விளைவித்தன.'

**இந்தியா.**—மே 16வ-யும் 18வ-யும் கிழக்கு அஸ்ஸாமில் எதிரி விமானங்கள் ஒரு நகரில் குண்டுகளை வீசின. சேதம் மிகக் குறைவு.

மே 20வ- பிரிடிஷ் விமானப்படை கலிவாவிற்கு அருகிலுள்ள எதிரி லக்ஷியங்களைத் தாக்கின. மே 19வ- அக்யாப்பும் தாக்கப்பட்டது.

இதைப்பற்றியும் மிஸ்ட்டர் அட்லி காமன்ஸ் சபையில் பேசும்போது சொன்னதாவது :—

'இந்தியத் தற்காப்பிற்காக எங்களால் முடிந்தவரை சைனியங்களைப் பலப்படுத்தி வருகிறோம். டயோகே ஸுரஸ்ஸைப் பிடித்துக்கொண்ட பிறகு மறுபடி ஜப்பானியத் தாக்குதல் நேருமென்று எதிர்பார்த்து ஸிலோனும் அதிகமாகப் பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறது. இந்து மகாசமுத்திரத்திலும் பலம் செய்யப்பட்டிருக்கிறது.'

தெற்கு பாகத்திலுள்ள சைனியத்தின் தலைமை மாற்றப்பட்டிருப்பதாக நியு டெல்ஹியில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு விசேஷ சம்பவம். இத் தலைவர் சுற்றுப் பிரயாணம் செய்து எல்லாம் சரியான நிலையில் இருப்பதாகவே அறிவித்தார். சண்டை நேரக்கூடிய ஸ்தலங்களும் தீர்மானிக்கப்பட்டன. சைனியம் தினம் விருத்தியாகிக் கொண்டேபோகிறது. சீக்கிரத்தில் எந்த இடத்திலும் சண்டை செய்யக்கூடிய தன்மையிலேயே இருக்கிறது. நவீன முறைகளிலும் ஒற்றுமையுடனும் இருக்கிறது. எங்கும் எதிரி இறங்கமுடியாது. பலவித பகுதிகளுக்குள் ஒற்றுமையும் இருக்கிறது.

**ஆஸ்திரேலியா.**—இவ்வாரத்தில் ஜப்பானியர் டிபோயின் என்றதைப் பிடித்துக்கொண்டனர். மோர்ஸ்பியையும் தாக்கியிருக்கின்றனர். ஆஸ்திரேலிய விமானப்படை கோபாங், லே, ரபால் முதலியவைகளைத் தாக்கியது. அதிகாரத்தை மெக் ஆர்தர் வகித்துவருகிறார். பிரிடிஷ் விமானங்கள் 77 எதிரி விமானங்களை அழித்து 100 விமானங்களைச் சேதப்படுத்தின.

ஆஸ்திரேலிய நிலைமையைப்பற்றி மிஸ்ட்டர் அட்லி மேமீ 19வ- சொல்லும் போது :—

'இந்து மஹா சமுத்திரத்தில் நாம் பலம் செய்திருக்கிறோம். ஆனால் ஜப்பானியப் படைகள் ஆஸ்திரேலியா, நியூஸீலாந்தைத் தாக்கலாம்.

'காலம்தான் முக்கியமானது. ஆஸ்திரேலியாவிலிருந்து துருப்புகளை அனுப்புவது சுலபம். பிரிடனிலிருந்து வருவதானால் காலதாமதம் ஆகும். இவ் விஷயங்கள் அமெரிக்காவுடன் சர்ச்சை செய்யப்பட்டன. ஆஸ்திரேலியாவின் மேற்கிலுள்ள பஸிபிக் பிரதேசம் அமெரிக்கரின் கீழ்விடப்பட்டிருக்கிறது. ஆகவே அமெரிக்கப் படைகளும், கப்பற்படையும் வந்திருக்கின்றன.

'ஆஸ்திரேலியாவில் நமது படைகள் விருத்தியாகி வருகிறது. மெக் ஆர்தர் தலைமை வகிக்கிறார். இங்கே ஜப்பானியர் வந்தால் தோற்றுப்போவார்கள்'.

**லிபியா.**—பிரிடிஷ் காவல் தொழில் சரியாக நடக்கிறது. எதிரியின் சிறிய டாங்கிப் படைகளும் வண்டிகளும் அழிக்கப்படுகின்றன. மெகிலி, ஸென்கலி, டென்ஜர்டர், பெங்காஸி, ஸோலுக், ம்ஸுஸ் பிரதேசங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கியிருக்கின்றன.

நெஹ்ரிங், பிஸ்மார்க் என்ற இரண்டு புதிய ஜெர்மன் ஜெனரல்கள் லிபியா விற்கு வந்துள்ளனர். அங்குள்ள ஜெர்மன் படைகளுக்கும் இதாலியப் படைகளுக் கும், மேலும் உதவி வந்திருக்கிறது. மால்டாவில தாக்குதலை அதிகப்படுத்தி' கிரீட், கிரீஸ், இதாலி முதலிய இடங்களிலிருந்தே இப்படைகள் வந்திருக் கின்றன. அதைப்போல் பிரிடிஷ் விமானப்படையும் அதிகப்பட்டிருக்கிறது. பாலைவனச் சண்டைக்கு லாயக்காக டாங்கிகளும், பீரங்கிப்படையும் இரட்டிப்பு மடங்கு வந்திருக்கின்றன. ஸ்மட்ஸ் இப்போர்முனையை விஜயம் செய்தபோது சைனியம் பூர்ண ரூஸ்திப்புடன் இருக்கிறதென்றும், தற்காப்பு ஸ்தலமாக இருப் பதோடு முன்னேற்றப் போர் நடத்தவும் உபயோகமாக இருக்கும் என்று பத்திரிகைகாரர்களுக்குச் சொன்னார். 10 நாட்களில் 2,000 மைல் தூரத்தைக் கடந்து எகிப்து ஸிரெனைகா முதலிய இடங்களைப் பார்வையிட்டார். தினம் 5 சொற்பொழிவுகளையும் செய்தார். சைனியக் கூடாரங்களையும். ஆஸ்பத்திரிகளையும், விமான நிலயங்களையும் பார்வையிட்டார். ஆசின்லக், கேஸி, கிரீஸ் மன்னரான ஜார்ஜ் முதலியோருடன் கலந்து பேசினார்.

**ருஷ்யா.**—கார்கவ்வில் பெரிய சண்டை நடக்கிறது. ஐந்து நாட்களில டிமோஷென்கோ 37 மைல் தூரத்தைக் கடந்தார். எதிரியின் முதல் தரமான படைகள் பிளக்கப்பட்டன. ஏராளமான எதிரி டாங்கிகளும், பீரங்கிகளும், லாரிகளும் யுத்த சாமான் கிடங்குகளும் கைப்பற்றப்பட்டன. இதைப்பற்றி அனலிஸ்டு விமர்சகர் சொல்லுவதாவது :—400 கிராமங்களைப் பிடித்தாலும் வெறும் பிரதேச லாபம் மாத்திரம் போதாது. எதிரித் துருப்பு களையும், யுத்த சாமான்களையும் கைப்பற்றுவதும் விசேஷம் என்றார்.

கார்கவ் முனையில் ஏராள பலம் கொண்டிருந்தாலும் ஜெர்மானியர்களால் ருஷ்யரின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக இஸ்யுன், பொர்வென்கோவா முனையில் தாக்கப் பார்க்கின்றனர்.

கெர்ச் அநேகமாக விழுந்ததென்றே சொல்லலாம். இருந்தாலும் ருஷ்யர் கள் யேனிகொபா என்ற கோட்டையில் இருந்து எதிர்த்து வருகின்றனர். இன்னும் யுத்தம் இங்கே நடைபெறுகிறது. தற்சமயத்தில் கெர்ச், கார்கவ் இவைகளைப்பற்றி அதிகத் தகவல்கள் கிடைத்தாலும் லெனின்கிராட், கலினின், ஸ்மொலென்ஸ்க் டோரோகோபுஷ் பிரயான்ஸ்க் முனைகளிலும் 1,000 மைல் தூரத்திற்குச் சண்டை நடக்கிறது.

ருஷ்யர்களுக்குக் குத்தகைக் கடன் மசோதாப்படிக்குச் சாமான்கள் போவதாக ஜனாதிபதி ரூஸ்வெல்டு சொன்னார். 1941-ல் 180 லக்ஷம் டாலர் மதிப்புக்குச் சாமான்கள் சென்றதில் தற்சமயம் 5,180 லக்ஷம் டாலர் மதிப்புக்கு போகின்றன. பிரிடிஷார் கொடுக்கும் உதவியைப் பற்றி மிஸ்டர் அட்லி சொன்னதாவது :—

'சொன்னபடி நமது உதவி ருஷ்யாவிற்குப் போகிறது. மர்மான்ஸ்க் கடல் மார்க்கம் மிகவும் சிரமமாகி விட்டது. இதனால் கப்பல்களுக்கும், படைக்கும் அதிகக் கெடுதி ஏற்படுகிறது. என்ன சிரமமிருந்தாலும் முடிந்தவரை அனுப்பு வதெனத் தீர்மானித்திருக்கிறோம்.

'மற்றொரு வழியிலும் உதவி செய்யப்படுகிறது. லிபியாவில் ஏராள எதிரிப் படைகளை நாம் தடுத்து வைத்திருக்கிறோம். மால்டா தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளுவதோடு, ஜெர்மன் விமானங்களையும் ஈடுபடுத்தி வருகிறது. மேலும் ஜெர்மனிமேல் நம்மால் செய்யப்படும் தாக்குதலால் ருஷ்யப் போர்முனையி லிருந்து ஜெர்மன் விமானங்களும் பிரிக்கப்படுகின்றன.

**பிரிடிஷ் விமானப்படை.**—வடக்கு பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி முதலிய இடங்களில் மறுபடி தாக்கி வருகிறது.

**பலவகைப்பட்டவை.**—(1) மெக்ஸிகோ. மியாமிக்கு அருகில் பெட்ரீரோ டெல்லானோ என்ற மெக்ஸிகோ எண்ணெய் டாங்கியை அச்சுநாட்டு யு-படகு 13உ புதன்கிழமை தாக்கி மூழ்கடித்தது. ஆகவே மெக்ஸிகோ அச்சுநாடுகளை நஷ்ட ஈடுசெய்யும்படி ஸ்வீடன் மூலமாக கேட்டிருக்கிறது.

2. **அமெரிக்க—பனுமா ஒப்பந்தம்.**—இந்த இரு நாடுகளுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு பனுமாவின் தற்காப்பிற்காக அமெரிக்கப் படைகள் அனுப்பப்படும்.

3. **நேசநாடுகளின் விமான சம்பந்தமான கூட்டம்** ஒன்றை செவ்வாய்க்கிழமை ஒட்டாவாவில் கனடா பிரதம மந்திரி மெக்கன்ஸி கிங் திறந்துவைத்தார். அதற்கு 16 நாடுகளின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஏற்கனவே கனடாவில் இருந்துவரும் விமானிகளின் பயிற்சி காலம் இரண்டு வருஷத்திற்கு அதிகப்படுத்தப்பட்டது. இதற்கு மிஸ்ட்டர் ரூஸ்வெல்ட் அனுப்பிய செய்தியில் பின்வருமாறு கூறினர் :—

'கனடாவில் இக்கூட்டம் நடப்பது பொருத்தமானதுதான். ஏனென்றல் கனடா ஜனநாயகத்தின் விமானங்களுக்கு உற்பத்தி ஸ்தலமாக இருக்கிறது. அங்கே இருக்கும் விமானப்பயிற்சி தளங்களில் தயாரான ஏராள மாலுமிகள் பல யுத்தரங்கங்களில் ஈடுபட்டு யுத்தத்தில் வெற்றி பெற்று ஸ்வதந்திரத்தை ஸ்தாபிக்கப் பாடுபடுகின்றனர்.

இக்கூட்டத்தை திறந்துவைக்கும்போது மெக்கென்ஸி கிங் சொன்னதாவது:-

"யுத்தம் நடக்கும் அகண்ட பிரதேசங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்போது கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் போக்குவரத்துகள் அதிகம் இருக்கின்றன. யுத்தப் பிரதேசங்களுக்கு நடுமத்தியில் இந்நாடு இருக்கிறது. விமானச் சண்டையை அதிகமாகச் செய்வதற்கும், அட்லாண்டிக் பஸிபிக் முதலிய இரு கடல்களிலும் வேண்டிய படைகளை அனுப்புவதற்கு வசதியுள்ளது.'

4. அமெரிக்கத் துருப்புகளும், டாங்கிகளும், பீரங்கிப்படையும் அமெரிக்க, பிரிடிஷ் கப்பல்களில் ஏறி, சேதமன்னியில் வட அயர்லாந்தில் இறங்கின. இவைகளை அயர்லாந்தின் தற்காப்பிற்கும், ஐரோப்பாவில் இறங்குவதற்கும் உபயோகித்துக்கொள்ள இருக்கும்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **11—5—42.** (திங்கட்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **பகலில்.**—பலமாகத் துணைபுரியப்பட்ட விரோதி கப்பல் கூட்டம்—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கருகாமையில். | ஒரு விரோதி கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. | 2 விமானங்கள். | 1 விமானம். |
| **இரவில்.**—துணைபுரியப்பட்ட விரோதி கப்பல் கூட்டம். | | | |
| **நார்வே.**—(Norwegian) கடற்கரைக் கருகாமையில். | மிகப் பெரிய கப்பல் தீப் பற்றியது. | | |
| ஏலிஸண்டு (Aalesund). | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **விமான எதிர்ப்புகள்.**—ஸிரெனேகாவின் (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| **விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்**—போர்முனை எங்கும். | | 16 விமானங்கள். | 42 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **ஒரு விமான நிலயம்.**—வட பர்மா (Burma). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **12—5—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் தெரியவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான எதிர்ப்புகள்.**—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துருப்பு ஏற்றிச் செல்லும் விரோதி விமானங்கள்—மத்தியதரைக்கடலில் (Mediterranean). | | 1 விமானம். | 15 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 17 விமானங்கள். | 51 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—ஆக்கியாப் (Akyab), சைனு (China). | | | |
| | விரோதி ஆக்கிரமித்த விமான நிலயம்—ஹானோய் (Hanoi). | | | 15 விமானங்கள். |
| **13—5—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதிக்குச் சொந்தமான நடுத்திரமான ஸப்ளைக் கப்பல்.—நார்வே (Norway)க்குப் பக்கத்தில். ஏலிஸண்டு (Aalesund)க்கருகாமையில். | தீப்பற்றியது. | | |
| | ஒரு கப்பல்.—வாக்ஸோ (Vaagso)க் கருகாமையில் நார்வே (Norway). | தகர்க்கப் பட்டது. | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்—லிபியா (Libya). | | | |
| | **விமான எதிர்ப்புகள்.**—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 23 விமானங்கள். | 40 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு Far East-பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம்.**—ஆக்கியாப் (Akyab). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், துறைமுகத்திலுள்ள கப்பல்கள்.—ராபால் (Rabaul). | மூன்று பாம்பர் விமானங்கள் தகர்க்கப் பட்டன. | மற்ற விமானங்கள் சேதமாயின. | |
| | **தூரக்கிழக்கு—அம்பாயினு (Amboina)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி கப்பல்கள்.—அம்பாயினு (Amboina). | ஒரு கப்பல் மூழ்கடிக்கப் பட்டது; மற்றும் இரண்டு தாக்குண்டன. | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **14—5—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும் ஏற்பட்ட விமான எதிர்ப்புகளைப்பற்றி தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **துறைமுகம், கப்பல்கள்.**—பெங்காஸி (Benghazi). | | | |
| | **விமான நிலயங்கள்.**—மார்டூபா (Martuba), பெனினு (Benina). | | | |
| | **விமான எதிர்ப்புகள்.**— ஸிரெனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசங்களில. | | 2 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.**—போரரங்கம் முழுவதிலும். | | 11 விமானங்கள். | 25 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு Far East–பர்மா (Burma)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விரோதத்துச் சொந்தமான படகுகள்.**— சின்ட்வின் (Chindwin) நதிக் கரையில். | அநேக படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. | | |
| | **டெபாயின் (Deboyne) தீவு**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **கடற் விமான தளம்.**-டிபாயின (Deboyne). | | | |
| **15—5—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **பகலில்.**—3 ஜெர்மன் வேடிகண்ணியறிக்கும் கப்பல்கள்.—செர்பர்க் (Cherbourgh) தீபகற்பத்தின் வடக்குக் கடற்கரைக் கருகாமையில். | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; ஒன்று சேதமாக்கப்பட்டது. | நஷ்டமில்லை. | |
| | **இரவில்,—ஜெர்மன் துணைக்கப்பல்கள்.**– பிரிஸியன் (Frisian) தீவுகளுக் கருகாமையில். | 3 கப்பல்கள் தீப்பற்றின. | 5 விமானங்கள். | |
| | **வெடிகண்ணிகள் பாவுவது.**—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான எதிர்ப்புகள்.**—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.**—போரரங்கம் முழுவதிலும். | | 13 விமானங்கள். | 56 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம், விமானம் பறப்பதற்கு உதவுமிடங்கள், மற்ற கட்டடங்கள்.**—லே (Lae). | | | |
| | **டெபமாயின் (Deboyne) தீவு**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **கடற் விமான தளம்.**—டெபாயின் (Deboyne). | | 1 கடல் விமானம். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—5—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கியாஸ் (Gas) பீப்பாய்கள், கப்பல் துறைமுகங்களில் தண்ணீர், வரும் இடங்கள், இருப்புப்பாதைகள், உள்பட எல்லா லக்ஷியங்களும்.—ஆக்கிரமித்த வட பிரான்ஸ் (France). | | நஷ்டமில்லை. | |
| | விமான எதிர்ப்புகள்.—டீப் (Dieppe) நதி பிரதேசத்தில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | 3 விமானங்கள். | |
| | விமான நிலயம்—பெனினு (Benina). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள் தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 20 விமானங்கள். | 65 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—மிட்கைனு (Myitkyina). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவுபார்த்தல்.—லே (Lae) பிரதேசத்தில். | | | |
| **17—5—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல் துறைகள்—பொலாயின் (Boulogne). | | 8 விமானங்கள். | |
| | விமான எதிர்ப்புகள்—ஆக்கிரமித்த பிரான்ஸிலுள்ள (France)-லக்ஷியஙகளில். | | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் இல்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள் தரையிலுள்ள விமானங்கள்.—ஸோவியத் போர்முனை எங்கும். | | 21 விமானங்கள். | 64 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor) டச்சு (Dutch)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள்.—கொயபாங் (Koepang). | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | விரோதி விமான நிலயம்.—வட பர்மா (Burma). | | | |
| **18—5—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ஆக்கியாப் (Akyab). | | | |
| | படகுகள், மற்ற லக்ஷியங்கள்.—சின்ட்வின் (Chindwin) நதிக்கரையில். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **12—5—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—மால்டா (Malta | … | 7 சுடப்பட்டன; 7 சேதமாயின. | |
| | இரவில் | … | 3 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **13—5—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | … | 1 விமானம். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | 2 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன; 1 சேதமாயின. | |
| **14—5—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இங்கிலாந்தின் (England) தென்மேற்குக் கடற்கரை. | | 1 விமானம். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | … | 8 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம் | … | 2 விமானங்கள். | |
| **15—5—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கிழக்குக் கடற்கரை இங்கிலாந்து (England). | | 1 விமானம். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 16—5—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | ... | 5 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 17—5—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தின் (England) கிழக்குக் கடற்கரை. | | 1 விமானம். | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Maita). | | 16 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு Far East–நியூ கினி (New Guinea)-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| 18—5—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்.) | | | |
| | பகலில்.—தென்கிழக்கு, தெற்கு இங்கிலாந்து (England). | | சிலர் கொல்லப் பட்டனர். சொற்பச் சேதம். | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | 1 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. 2 சேதமாயின. | |

# யுத்தக் குறிப்புகள்.

**“இன்னும் கஷ்டநிலை இருக்கிறது.”** மனத்தளர்ச்சியோ, சந்தேகமோ ஏற்படும் சமயங்களில் தைரியம் பெறுவதற்கு மிஸ்டர் சர்ச்சில் சொல்லுவதைக் கேட்பதுதான் சரியான மருந்து என்று நாம் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறோம். அவர் வருங்காலத்தைக் குறித்துத் தீர்க்காலோசனை செய்து ஆழ்ந்த அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்தும் சொற்களைச் சொல்லுகிறார். மேலும் அவர் திடமனதும்,

வெற்றியைக் குறித்து நிச்சயமான நம்பிக்கையும் கொண்டிருக்கிறார். மேமீ 16வ சனிக்கிழமை லீட்ஸ் நகரில் தனது நாட்டு மக்களுக்கு அவர் அறிவித்த தாவது:—

"யுத்தத்தில் நாம் அடைந்து இருக்கும் நிலையைப் பார்த்து கஷ்டநிலைகளை நாம் கடந்துவிட்டோமென்று அவசரப்பட்டுச் சொல்லக்கூடாது. இன்னும் கஷ்டங்கள் இருக்கின்றன.

"நேசநாடுகள் அவ்வித கஷ்ட நிலைமைகளைச் சீக்கிரத்திலேயே தாண்டி விடும். அப்போதுதான், இந்த உலகில் தீங்கையும் அழிவையும் பரவச்செய்யும் கொடிய சத்துருக்களை நாம் அடியோடு ஒழிக்க சாத்தியமாகும். மேலும் இனி இந்த உலகில் யுத்த சிரமமே ஏற்படாமலும் செய்யப்படும்.

"இருள் அடைந்ததும் பயங்கரமுமான பள்ளத்தாக்குகளைக் கடந்து சூரிய ஒளியை அடைவதுபோல கஷ்ட நிலைகளில் விடாமுயற்சியுடன் இருந்து சமாளித்து வந்தால் ஒருநாளும் அழியாத சௌக்கியத்தை அடைவோம்.

"யுத்தம் ஆரம்பித்து 33 மாதங்கள் ஆவதில் நாம் எதிரியிடம் பல்லைக் காட்டிக்கொண்டு நிற்கவில்லை. அவன் கடுமையாக நடந்துகொண்டால் நாமும் அவ்விதமே நடந்துகொள்வோம். நம்மால் முடிந்தவரை லாபங்களையடைவோம். அதிகமாகவே எதிரியைத் தாக்குவோம்.

"ஆயுதம் தரித்த மனிதர்களுக்கு முன்பாக வெறும் தைரியம் மாத்திரம் போதாது. தீர்மானத்துடனும், மேலான காரணங்களுக்காகவும், ஆயுதங்களை வைத்துக்கொண்டும் சண்டை செய்வதுதான் பயன்படும்."

வி வி வி வி வி வி வி

**பகீரதப் பிரயத்தனம்.** அருகில் காணப்படும் வெற்றியை மாத்திரம் கவனிக்கும் சாதாரண மனிதர்களால் பர்மாவில் நடந்த தேவாசுர யுத்தத்தினால் நமக்கு நேர்ந்திருக்கும் சாதகங்களை எளிதில் கண்டுகொள்ள முடியாது. பின்வாங்கிக் கொண்டேபோவது ஒரு ராணுவ சம்பந்தமான தந்திரமாகுமே தவிர வியக்தமான ஒரு வெற்றியைத் தெரிவிக்காது. மேன்மை தங்கிய வைஸிராய் சமீபத்தில் சொன்ன விதமாக இவைகளைக்கொண்டு யுத்தத்தை ஜயித்துவிடவும் முடியாது. இருந்தாலும் தற்காலத்திய நடவடிக்கைகளைக் கவனித்தால், சாம்ராஜ்யப் படைகளும், சீனப்படைகளும் மேலான சாதகத்தையடைந்திருக்கின்றனவென்றே சொல்ல முடியும். மூன்று மாத காலமாக இவைகள் ஒன்றுபட்டு நின்றதும், எதிரிகளின் ஸப்ளைகளைத் துண்டிப்பதும், கடல் வழியாகவும் தரைவழியாகவும் முஸ்தீப்பைப் பெரும் எதிரியை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தோற்கடிப்பதுமாக இவர்கள் செய்த செயல்கள் சரித்திரத்திலேயே புகழ் அடையும்.

இந்த சந்தர்ப்பத்தில் சீனர்களின் ஐந்தாவது, ஆறாவது படைகளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லப்படவேண்டும். இவ்விரண்டு படைகளும் பொட்டல் வெளிகளில் எதிரியின் விமானத் தாக்குதல்களுக்கும், பீரங்கித் தாக்குதல்களுக்கும் உள்ளாயின. இருந்தாலும் எதிரியால் சூழ்ந்துகொள்ளப்பட்டாமல் தப்பிவிட்டன.

பர்மாவிலிருந்த நேச நாட்டுத் துருப்புகள் பர்மாவில் மூன்று லக்ஷியங்களை சாதித்திருக்கின்றன. 1. இந்தியாவிற்கும், சைனாவிற்கும் ஏற்படுத்தப்பட்ட போக்குவரத்து ரஸ்தாக்கள் முடியும்வரை எதிரியைத் தடைசெய்வதும்; 2. இந்தியத் தற்காப்பு முறைகள் முடியும்வரை எதிரியைத் தடுப்பதும்; 3. எதிரியை மின்னல் தாக்குதல் செய்யவிடாமல் சோர்வடையும்படி செய்வதும் தான்.

இவைகளில் முதல் இரண்டு பூர்த்தியாகிவிட்டன. மூன்றாவதும் பாதி கை கூடிவிட்டது. மேலும் முன்னேறும்போதெல்லாம் எதிரிக்கு ஏராள நஷ்டங்கள் விளையும்படிக்கும் செய்யப்பட்டன. இந்தியப் பாதுகாப்பு முறைகளும் தயார்

செய்யப்பட்டன. எதிரியும் கிடுகிடுவென்று முன்னேறமுடியாமல் தடைசெய்யப் பட்டான். அதோடு மழையும் ஏற்பட்டு குளிர் காய்ச்சலும், இதர தொந்தரவும் அவனுக்கு ஏற்படும்.

இவ்விதம் கிடைத்த அவகாசத்தை நேசநாடுகள் நல்லவிதமாக உபயோகித் திருக்கின்றன. அலூஷியன் தீவுகளிலிருந்து அலாஸ்காவிற்கும், அலாஸ்காவி லிருந்து நீயு கினிக்கும், அங்கிருந்து கொழும்பூ வழியாக மெடகாஸ்கருக்கும் நேச நாட்டுத் தற்காப்பு திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சமயம் வந்ததும் எதிரி யின்மேல் தாக்கப்படும். அதோடு இந்தியா, ஆஸ்திரேலியா, சைனு முதலிய இடங்களிலிருந்து தரை மார்க்கமாயும் எதிரிமேல் தாக்குதல் ஏற்படலாம். போராததற்கு அமெரிக்கக் கப்பற்படையும் தலையை நீட்டி வருகிறது. இவ்வித காரணங்களால் ஜப்பான் ஆக்கிரமண திட்டத்திலிருந்து தற்காப்பு முறைக்கு வந்துவிட்டது. இனிமேல் ஜப்பானுல் கபடமாயும், திடீரென்றும் தாக்க முடியாது. இந்த விதமாகக் காலம் நேசநாடுகளுக்கு உதவி செய்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் அமெரிக்காவில் யுத்த சாமான்கள் ஏராளமாகச் செய்யப்படு கின்றன.

வி வி வி வி வி வி வி

**இந்திய–பர்மா எல்லைப்புறம்.** இந்தியாவின் பக்கமாக ஜப்பானியர் வருவ தானுல் அவர்களுக்குத் தடையாக பர்மா வில் ஐராவதி, சிந்துவின் நதிகளும் அவைகளுக்குச் சரியாக பிரம்மபுத்ரா நதியும் இருக்கின்றன. மேலும் இவைகளுக்கு இடையில் பள்ளத்தாக்குகளும், பெரும் காடுகளடர்ந்த மலைத்தொடர்களும் இருக்கின்றன. போக்குவரத்து சாதனங் களும் கிடையாது. தாத்காலிகமாக பிரிடிஷ் சாமான்கள் போவதற்கும், வெளி நாடுகளிலிருந்து இந்தியர்கள் வருவதற்கும் மாத்திரம் சில ரஸ்தாக்கள் போடப் பட்டன. இவைகளையும் வேண்டாதபோது அடைத்துவிடலாம். கூட்டமாகவோ, காடுகளில் சண்டை செய்தோ ஜப்பானியர் இப்பாகங்களில் வரமுடியாது. அரக்காணர், மாகாஸ், சின்னர்கள், ஷான்கள், காரின்கள், காசின்கள் முதலி யோர் பெரும் முரடர்கள். இவர்களும் எதிரியுடன் சண்டை செய்வார்கள். இப் பாகங்களில் அதிகமான உணவுப்பொருள்களும் எதிரிக்குக் கிடைக்காது. ஏனென்ருல் ஒவ்வொரு வருஷமும் காட்டில் ஒரு பாகம் அழிக்கப்பட்டு கொஞ்சம் தான் சாகுபடி செய்யப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**'பொது க்ஷேமம்.'** ஜப்பானியர் வந்து ஆக்கிரமித்துக்கொள்ளுவ தற்குள்ளாகவே பொது க்ஷேம திட்டத் தின் கொடிய பலன்களை பர்மியர்கள் அனுபவிக்க ஆரம்பித்துவிட்டனர். மார்ச்சு 21உ ஐராவதிக்கரையிலிருந்து ஏராளமான கோதுமை முதலிய சாமான்களை ஜப்பான் கைப்பற்றியதுபற்றி இதாலிய ரேடியோவில் சந்தோஷமாக வாழ்த்தப் பட்டது. அதற்கு முதல்நாள், ஜப்பானிய மக்களுக்கு சந்தோஷமேற்படும் விதமாக அரிசி, சர்க்கரை முதலியவைகளை ஏற்றிக்கொண்டு இரண்டு கப்பல்கள் ஜப்பானுக்கு பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டன என்று ஸெய்கோன் ரேடியோ வில் சொல்லப்பட்டது. 'பர்மாவைச் சரிப்படுத்தும் திட்டத்தை ஜப்பானியர் தயாரித்துவருவதாக' பெர்லினில் ஏப்ரல் மாதத்திலேயே சொல்லப்பட்டது.

வி வி வி வி வி வி வி

**வெளியேற்றம்.** பர்மாவிலிருந்து இந்தியர்கள் தப்பிவரும் விஷய மாக இன்னும் அக்கரையில்லாத வதந்தி கள் உலாவி வருகின்றன. அதற்காகப் பின்கண்ட விஷயங்களை கவனிப்பது நலம். பர்மாவில் சுமார் 12 லக்ஷம் இந்தியர்களிருந்ததில் 3 லக்ஷம் பேர் பத்திரமாக வந்து சேர்ந்தனர். இதில் 50,000 பேர்கள் கடல் வழியாகவே வந்தனர். உணவு இடவசதி, ஜலம் முதலியவைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. வைத்திய உதவி யும் கொடுக்கப்பட்டது. பர்மாவில் டாமூவிலிருந்து இந்தியாவின் அருகிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் வரையிலும்|பாதையில் எல்லாம் இனமாகவே கொடுக்கப்பட் டது. இந்தியாவில் இந்திய அரசாங்கத்தாரும், பொதுஜனங்களும் தப்பிவருகிறவர்

களுக்கு சாப்பாடு, ரயில்வே கட்டணம் முதலியவைகளைக் கொடுத்து பத்திரமாக தங்கள் தங்கள் ஊர்களுக்கு அனுப்பி வந்தனர். தப்பி ஓடிவரும் சிறுவர்களின் படிப்பு வசதிகளும் இங்குள்ள பள்ளிக்கூடங்களில் செய்யப்படுகின்றன. சம்பளம், பென்ஷன், சொத்து, வியாபாரம், முதலியவைகளை பர்மா கவர்ன்மெண்டாரே கவனித்து வருகின்றனர்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியருக்கு கஞ்சா நான்காவது ஆயுதம்.** ஜோஸப் காலன்ஸ் என்பவர், ஜப்பானியர்கள் பொதுமக்களை அழிப்பதற்கு கஞ்சா முதலிய வஸ்துக்களை உபயோகிக்கும் விதத்தைப்பற்றி சில தகவல்களைக் கொடுத்திருக்கிறார்.

'ஜப்பானியர், தரை, கடல், விமானப்படைகளை உபயோகிக்கும் விதமாக அவர்களின் சைனியங்களுக்குப் பின்னால் லாகிரி வஸ்துக்களும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வஸ்துக்களைக் கொடுத்து பொதுமக்களை மயக்கி தங்களை எதிர்க்காமல் செய்துவிடுகின்றனர். சுலபமாகக் கிடைக்கக்கூடிய விலைக்கு இச்சாமான்கள் விற்கப்படுகின்றன. இவைகளை விற்கிறவர்கள் ஜப்பானியச் சைனியத்தில் சேர்ந்தவர்கள்தான்.'

மேலும் அவர் சொல்லுவதாவது :—"டைன்ஸ்டின் நகரம் கஞ்சா வியாபாரத்திற்குப்பெயர்போனது. தூரக்கிழக்கு நாடுகளில் பூராவிலும் இதன் கிளைக்கடைகள் இருக்கின்றன. இந்த நகரத்திற்கு ஜப்பானியர் விசேஷ சௌகரியங்களைச் செய்திருக்கின்றனர். சீனர்களைத் தளரச்செய்யவும், ஏமாற்றவும் இவ்வஸ்துக்களை உபயோகிப்பதென்பது ஜப்பானியரின் ஒரு முறையென்றே சொல்லப்படுகிறது."

கஞ்சாவால் ஏற்படக்கூடிய பலன் யாவருக்கும் தெரிந்ததுதான். தைரியம் குன்றும். மனம் ஏகாக்ரமாக இராது. தளர்ச்சி ஏற்படும். வேலையில் ஊக்கம் குன்றும். புத்தி மாராட்டம் ஏற்பட்டு எதிரியுடன் சண்டை செய்யும் நோக்கமே ஏற்படாது.

ஆனால் ஜப்பானியச் சிப்பாய்களுக்குப் போடப்பட்டுள்ள உத்தரவைப் பாருங்கள்.—

"ஜப்பானியரைப் போன்ற உயர்ந்த ஜாதியார் லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கக்கூடாது. சீனர்கள், ஐரோப்பியர்கள், மற்றும் சில இந்தியர்களே இவைகளை உபயோகிப்பது. லாகிரி சாப்பிடுகிறவன் ஜப்பானியச் சைனியத்தில் சேரக்கூடாது. யோக்கியதையே போய்விடும். ஜப்பானிய சக்கிரவர்த்திக்கு உட்பட்டவனாக மாட்டான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**பிரெஞ்சு குடியேற்ற நாடுகள்.** ஒரு காலத்தில் பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகள் உலகில் இரண்டாவதாக பெரிதாக இருந்தன. ஆனால் பிரான்ஸ் விழுந்ததும் இவைகள் சின்னாபின்னமாகப்போய்விட்டன. அதுவே நேசநாடுகளுக்கு கொஞ்சம் பாதகமாயிற்று. அதனால்தான் எந்த பிரெஞ்சு நாட்டையும் அச்சுநாடுகள் ஆக்கிரமித்துக்கொள்ளாமல் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பார்த்து வருகிறார். ஸிரியாவையும், மெடகாஸ்கரையும் பிரிடிஷ்காரர்கள் பிடித்தனர். நியூ கலிடோனியாவைப் பிடித்து, மார்டினிகூவுடன் சமாதானத்தையும் அமெரிக்கா பேசிவருகிறது.

பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகள் 5 லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணம் இருக்கின்றன. இதில் கால்வாசி ஸ்வதந்திர பிரான்ஸுக்கும், நேசநாடுகளுக்கும் உட்பட்டிருக்கிறது. அவை ஆபிரிக்காவில் மத்தியரேகைப் பிராந்தியம், ஸிரியா, லெபானன், பிரெஞ்சு இந்தியா, தென்கடல் தீவுகள், ஸெயிண்டு பியரி, மிகாபர் முதலியன.

பாக்கி முக்கால் பங்கு பிரெஞ்சு இந்தோ-சைனா, வடமேற்கு ஆபிரிக்கா, மார்டினிகூ, காடேலோப், பிரெஞ்சு கயானா, ஸோமாலிலாந்து, மெடகாஸ்கர்.

இதில் மெடகாஸ்கரை சமீபத்தில் பிரிடிஷ்காரர்கள் பிடித்தனர். இந்தோ-சைனுவை ஜப்பான் பிடித்துக்கொண்டது, போகபாக்கி விஷி ஆதிக்கத்தில் இருக்கிறது. அதாவது, லவால், மார்ஷல் டீட், ஜாகஸ்டோரியாட் மூவரும் கவனித்து வருகின்றனர். இதில் முதலாவதானவன் இந்தோ-சைனுவை ஜப்பானுக்குக் கொடுத்தான். அடுத்தவன் விஷி-ஜப்பான் சிநேகத்தை ஸ்தாபித்தவன். கடைசியானவனுக்கு ஜெர்மானியர் சம்பளம் கொடுத்துவருகின்றனர். ஆங்காங்குள்ள பிரெஞ்சு அதிகாரிகளுக்கு ஸ்தந்திரமே கிடையாது. யாவும் தலைமை அதிகாரிகள் சொற்படிதான் செய்யப்படவேண்டும்.

இந்தப் பிரதேசங்களில் சில நன்ருகத் தற்காப்பு செய்யப்பட்டு கேந்திர ஸ்தானங்களில் இருக்கின்றன. தெற்கு இந்து மகா சமுத்திரத்தில் மெடகாஸ்கர் ஜிப்ரால்டரைப் போல் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது. அமெரிக்காவுடன் போக்குவரத்து செய்யும் ஸ்தலத்தில் டாகர் இருக்கிறது. மெடகாஸ்கரில் இரண்டு சண்டைக் கப்பல்களிருந்தன. ஒன்று போகன்வில்லி, சமீபத்தில் மூழ்கடிக்கப்பட்டது. டாகரில் ரிசலியூவும், கஸபிளாங்காவில் ஜோன் பார்டியும், மார்டினிகூவில் பீர்னீயும் இருக்கின்றன. ஜிபூடியிலிருந்து மெடகாஸ்கருக்கு நீர்மூழ்கிகளும் போய்வருகின்றன. இவைகளை எல்லாம் ஹிட்லரின் சூழ்ச்சிகளுக்கு உட்படுத்தினல் பிரெஞ்சு இந்தோ-சைனுவைப்போல் இவையாவும் நாசமாகவேண்டியதுதான்.

வி வி வி வி வீ வி வி

**மார்டினிகூ.** விஷியுடன் இருந்த பழைய சிநேகத்தை ஒட்டி மார்டினிகூ விஷயத்தில் அமெரிக்கா நடந்துகொண்டு வருகிறது. இருந்தாலும் லவால் விஷயத்தில் தயவுகாட்டவில்லை. இதைக்குறித்து அமெரிக்கக் குறிப்பு கூறுவதாவது :—

'ஜெர்மனியிடன் அதிக உறவுடன் நடந்து கொள்ளுவதாக விஷித் தலைவன் சொல்லுவதால் பழைய ஒப்பந்தங்களின்படி அமெரிக்க அரசாங்கம் நடந்து கொள்ள முடியாது. இதன் பயனுக பின்கண்ட ஆறு நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்படுத்தி இருக்கிறது. (1) ஆண்டிலிஸ்ஸில் இருக்கும் சண்டைக் கப்பல்களையும், விமானங்களையும் ஆயுதமில்லாமல் செய்வது, (2) ரேடியோ, தந்தி தபால் முதலியவைகளை வசப்படுத்திக்கொள்ளுவது, (3) வியாபாரத்தையும், பிரயாணிகளையும் மேல் பார்ப்பது, (4) அங்கிருக்கும் வியாபாரக் கப்பல்களை அமெரிக்கா எடுத்துக்கொள்ளுவது, (5) பிரெஞ்சு ராணுவத்தையும் கப்பற்படையையும் கேவலம் போலீஸ் வேலைக்கு மாத்திரம் வைத்துக்கொள்ளுவது, (6) விஷிக்குச் சொந்தமான தங்கத்தையும், அரசாங்கத்தாரின் பொருளையும் கட்டுப்படுத்துவதும்தான்.

விஷியின் சார்பாக லவால் பதிலனுப்பும்போது அமெரிக்காவுடன் சமாதானம் செய்யும் முறையில் நடந்துகொள்ள முடியாதென்றும் இருந்தாலும் கப்பல்களில் ஆயுத பரிஹரணம் செய்தால் அமெரிக்கா அவைகளை உபயோகிக்கக் கூடாதென்றும் சொல்லிவிட்டான். ஆண்டிலெஸ்ஸிலிருக்கும் அட்மிரல் ராபர்ட்ஸ் மூலமாக செய்யப்படும் நிபந்தனைகளுக்கு விஷி இணங்குமே தவிர நேராடி ராபர்ட்ஸுடன் ஏதாவது சமாதானம் செய்துகொண்டால் அவைகளை விஷி அங்கீகரிக்காதென்றும் சொல்லியிருக்கிருன்.

வி வி வி வி வி வி வி

**ஸால்ஸ்பர்க் சந்திப்பு** ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் ஏப்ரல் 29-ம் தேதி ஏற்பட்டது. இதில் நான்கு விஷயங்கள் சர்ச்சை செய்யப்பட்டனவாம். ருஷ்யாவில் செய்யப்பட்ட மாரிகாலத் தாக்குதலின் பயனும், மத்தியதரை கடல் நிலைமையும், ஜப்பானிய யுத்தமும், வசந்த காலத் தாக்குதலும் சர்ச்சை செய்யப்பட்டன. மால்டாவில் அச்சுநாடுகள் செய்த தாக்குதல் தளர்ந்தும், நீர்மூழ்கி யுத்தம் குறைந்தும், ரோட்ஸ், லோவோஸ், பெங்காஸி, டெர்னு, இன்னும் இதாலியத் துறைமுகங்கள் இவைகளில் பிரிடிஷ் விமானத் தாக்குதல் அதிகரித்தும், இவர்கள் இருவரும் பரஸ்பரம்

திருப்திகரமாகப் பேசிக்கொண்டார்கள். ருஷ்யாவில் மாரிகாலம் பயன்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் இந்த நான்கு காலத்தில் 2,00,000 ஜெர்மானியர் இறந்தனர். 10 லக்ஷம் பேர் காயமடைந்தனர். 3,00,000 மோட்டார் வண்டிகள் நாசமாயின. மேலும் ருஷ்யர்கள் 50 புதிய பகுதிகளை ருஷ்யர்கள் கூட்டிக்கொண்டு தொழிற்சாலைகளைப் பத்திரமான இடத்திற்கு மாற்றிக்கொண்டும் விட்டனர்.

ஜப்பானியரின் வெற்றியைப்பற்றி ஹிட்லர் நிச்சயமாக மேற்கு நாடுகளுக்கும் ஜப்பானியரால் தீங்கு ஏற்படுமென்று சொல்லியிருக்கலாம். வசந்த காலத் தாக்குதலைப்பற்றி சர்ச்சை செய்யும்போது மேலும் இதாலி சைனியங்களையும் ஸப்ளைகளையும் அனுப்ப வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கக் கூடும்.

இச்சந்திப்பின் உண்மை கருத்து முஸோலினிக்கு கொஞ்சம் கௌரவம் காட்டி அதன் மூலம் இதாலியில் கொஞ்ச நாள்கள்வரை கலகங்களேற்படாமல் செய்யவே இருக்கும். சாம்ராஜ்ய நாடுகளை இழந்ததைப் பற்றி இதாலியர்களுக்கு இன்னும் கவலையாகத்தானிருக்கிறது. நைட், கார்ஸிகா, ஸாவாய் முதலியவைகளை லவால் விட்டுக் கொடுக்கவும் மாட்டான். ஜெர்மன் ரகசிய போலீஸ் இதாலி பூரா பரவியிருக்கிறது. 'சண்டை போதும், ரகசியப் போலீஸ்போதும்' என்று எங்கும் சப்தமாக இருக்கிறது. ஆகவே முஸோலினியின் நிலைமையை ஸ்தாபிப்பதற்கே இச்சந்திப்பு இருக்கும். இதன் பயனாக முஸோலினி பிரதம நீதிபதியின் அதிகாரங்களைப்பற்றி ராஜதுரோகம் முதலியவைகளைக் கண்டிக்க சட்ட திட்டங்களை ஹிட்லர் போலவே செய்துவருகிறான்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியில் பிளவு.** ஹிட்லரின் நிலைமையும் ஸ்திரமாக இல்லை, இது டெயிலி ஹெரால்டு பத்திரிகையின் அரசியல் நிருபரான மிஸ்டர் W. N. எவர் என்பவருடைய குறிப்புகளிலிருந்து தெரிகிறது. முன்போலவே ஹிட்லரின் புகழ் அதிகமாகவே காணப்படுகிறது. ருஷ்ய யுத்தத்தில் தோற்றாலும், வாழ்கையில் ஏற்படும் சிரமத்தாலும், பிரிடிஷ் விமானப் படையின் தாக்குதலாலும் இப்புகழ் குன்றும். இருந்தாலும் பெரும்பான்மையோர் ஹிட்லர் வெற்றியடைவானென்றே நம்புகின்றனர்.

தொந்தரவுகளெல்லாம் சைனியத்தின் உயர்தர உத்தியோகஸ்தராலும் நாஸிக் கக்ஷித் தலைவர்களாலும் தான் ஏற்படுகிறது. இவர்களுக்கு ஹிட்லரின் ஸ்தாபனங்களில் நம்பிக்கை குன்றிவருகிறது. ஒரு தீர்மானத்திற்கும் வரமுடியாதபடி ஏதோ பைத்தியம் பிடித்தவனென்றே நினைக்கின்றனர். அவன் அதிகாரம் குறையக் குறைய, பரஸ்பரம் கலகம் அதிகரிக்கிறது.

ஹிட்லரை ஒரு பொம்மையாகச் செய்துவிடவேண்டுமென்று ஹிம்லர் எண்ணுகிறான். பிறகு தானே தலைவனாகிவிடலாம்.

கோயரிங் சைனியத்தைத் தயார் செய்துகொண்டு நாஸிக் கக்ஷியைத்தாக்க ஏற்பாடு செய்கிறான். சென்ற சரத்காலம் வரை சைனியத் தலைவர்கள் ஹிட்லர் சொன்னபடி நடந்துவந்தனர். அவர்களுடைய வார்த்தையைக் கேளாது மாஸ்கோவைப் படையெடுத்தான். அவர்களும் ஹிட்லரை வசப்படுத்த நினைக்கின்றனர்.

ஹிம்லரும் அவனது ஆட்கள் ஒரு பக்கத்திலும், கோயரிங்கும் அவனுக்குக் கீழுள்ள தலைவர்கள் மற்றொரு பக்கத்திலும் இருந்து அதிகாரத்தைக் கைப்பற்ற நினைக்கின்றனர். சாமான்களின் உற்பத்தியில் இத்தகராறு நன்றாகத்தெரிகிறது.

இருந்தாலும் யாவரையும் ஹிட்லர் தனது சொற்படி நடக்கவேண்டுமென்று சொல்லி வருகிறான். இப்படிச் செய்யாவிட்டால் மனஸ்தாபங்கள் முத்திவிடும்.

ஆனால் இதிலிருந்து ஜெர்மனிக்கே யுத்தத்திற்கு ஒரு முடிவுவந்து விடுமென்று சொல்ல முடியாது. ஆனால் ஜெர்மன் யுத்த முயற்சி பொருளாதாரம், ஒற்றுமை முதலியவைகளுக்கும் கெடுதி ஏற்படும்.

**யுத்தத்திற்கு நார்வே செய்த உதவி.** "நார்வே கப்பற்படையின் சில பகுதிகள் ஆபிரிக்கா, இந்தியா இவைகளுக்கு அருகிலும், அட்லாண்டிக், வடகடல், இங்கிலீஷ் கால்வாய் இங்கும் சஞ்சரிக்கின்றன. பிரிடனின் கடற்கரைப் பாதுகாப்பில் நார்வே விமானங்களும் ஈடுபட்டிருக்கின்றன. நார்வே சைனியம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

"முன்னேறித் தாக்கும் சமயத்தில் மும்மரமாக சண்டை செய்ய லாயக்கான சைனியம் ஒன்று இவர்களால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

"நார்வே கப்பற்படை நமது வசத்திலிருப்பதே நார்வேயால் செய்யப்பட்ட உதவியாக இருக்கிறது.

"யுத்த சாமான்களையும் உணவுகளையும் அனுப்பும் விஷயத்தில் நார்வே வியாபாரக் கப்பல்கள் ஈடுபட்டன. இதில் 30,000 நார்வே மாலுமிகளிருக்கின்றனர். நார்வேயைவிட்டு வந்ததும் இவர்கள் இங்கிலாந்திலிருந்து தங்கள் வேலையைச் செய்துவருகின்றனர்.

---

# ராணுவமும் பொதுமக்களும்.

---

(மிஸ்ட்டர். **R. D.** டென்னிஸ்டன் எழுதியது).

(மதருஸ் அகில இந்திய ரேடியோ ஒலிபரப்பு.)

நமக்கு ஞாபகப்படுத்திக்கொள்ளக் கூடிய காலம் முதல் மதருஸில் இந்திய, பிரிடிஷ் துருப்புகள் இருக்கின்றனவென்றும், அவைகளால் நமக்கு ஒருவித தீங்கும் ஏற்படவில்லையென்றும் தெரியும். இதற்கு மாறாக ஒரு சம்பவமும் நிகழ்ந்ததில்லை. சமாதான காலங்களில் துருப்புகளைப்பற்றிய சிந்தனை பொதுமக்களுக்கு ஏற்படுவதில்லை. நாம் தற்போது யுத்த நெருக்கடியில் இருக்கும் காரணத்தை முன்னிட்டு மாத்திரம் இந்தத் துருப்புகளால் நமக்கும், நமது சொத்துக்களுக்கும் தீங்கு ஏற்படுமென்று ஏன் நினைக்க வேண்டும். சாதாரண சமயத்தைவிட தற்போது அதிகத் துருப்புகள் இருப்பது உண்மை. ஆனால் அந்தக் காரணத்தைக்கொண்டு நமக்கு அதிக பந்தோபஸ்து ஏற்படுமென்று நினைப்பது தான் சரியானது. எதிரியிடமிருந்து நம்மைக் காப்பாற்றவே இத்துருப்புகள் வந்திருக்கின்றன.

மதருஸுக்கு கொஞ்ச தூரத்தில் 10,000 வேலையாட்களை நியமித்துக் கொண்டு நான் தொழிற்சாலையை நடத்துகிறேன். இதைக் காபந்து செய்ய சில இந்தியத் துருப்புகள் அனுப்பப்படுமென்று அறிவிக்கப் பட்டது.

"அப்பா, துருப்புகளா!" என்று எனது வேலையாட்கள் சொல்லிச் சென்றார்கள். ஆனால் அப்படிச் சொல்லிவிட்டு சென்றதன் தாத்பரியம் அவர்களுக்கே தெரியாதிருந்தது. தற்சமத்தில் ரயில்வே கட்டணங்கள் அதிகமாகிவிட்டதால் அடிக்கடி அயல் ஊர்களுக்குச் செல்ல முடியாததால் ஒவ்வொருவராகத் திரும்பி வருகின்றனர். ஏன் முதலில் செல்ல வேண்டும், பிறகு திரும்பி வர வேண்டும். இந்தத் துருப்புகள் வந்து ஏன் இந்தத் தொழிற்சாலையின் வேலையில் வேலைக்காரர்களை ஈடுபட முடியாமல் செய்யவேண்டும்?

**'பலாத்கார யுத்தம்'.**

அதற்கு இரண்டு காரணங்களிருக்கின்றனவென்று நினைக்கிறேன். 1914-ல் நடந்த யுத்தத்திற்கும் தற்போதிய யுத்தத்திற்கும் வித்தியாசமிருக்கிறது. தற்போது ரேடியோ முதலிய வசதிகளிருப்பதால் இவைகளைக்கேட்டுப் பொது மக்கள் சுலபமாகப் பயந்து விடுகின்றனர். எதிரிகள் இவைகளின் மூலம் பிரசாரம் செய்கின்றனர். இதற்குத்தான் பிரசாரம் அல்லது பலாத்கார யுத்தம் என்று சொல்லப்படுகிறது. சிறிய யுத்த சம்பவங்களைக் கொஞ்சம் அதிகமாகச் சொல்லியும், பொய் பிரசாரத்தைச் செய்வதாலும், சண்டைகள் நேராதபோதே சண்டைகள் நடந்ததாகச் சொல்லியும் எதிரி

பொதுமக்களைத் திடுக்கிடும்படி செய்கிறுன்.

இந்த யுத்த காலத்தில் பயங்கரமான பலவித பரிபாஷைகள் தோன்றியிருக்கின்றன. உதாரணமாக ஜெர்மானியரை ஹூணர்களென்று சொல்லலாமா என்று ஒருவர் சந்தேகப்பட்டார். ஜெர்மானியர் என்ற பதத்திற்கே கெடுதலான அர்த்தம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்போலவே "ஐந்தாம்படை" என்ற வார்த்தையும் கிளம்பியிருக்கிறது. ஐந்தாம் படையென்ருல் துரோககோஷ்டியென்றும், ஐந்தாம் படையினரென்ருல் துரோகிகளென்றும் சர்வசாதாரணமாக வழங்கி வருகிறது. இவ்வித முறையைக் கொண்டு பிரிடிஷ், இந்தியச் சைனியங்களுக்கும் பொதுமக்களுக்கும் மனஸ்தாபத்தை உண்டுபண்ணவே எதிரிகள் நினைக்கின்றனர். இவர்களுக்கு உதவியாகச் சில பத்திரிகைகளும் சேர்ந்து கொள்ளுவது போலவும் காணப்படும். ஆனல் உண்மையில் இந்தியத் துருப்புகளும் அவ்விதம் கடும் செய்கைகளைச் செய்வதில்லை. பிரிடிஷ் சிப்பாயும், வேலையில்லாத காலங்களில்கூட தன் இஷ்டப்படி திரிவதில்லை. ஆனல் ஸ்திரீகளுக்கெல்லாம் ஆபத்திருப்பதாக மட்டில் சொல்லப்படுகிறது. இந்த சந்தர்ப்பங்களில், அபிஸீனியா, லிபியா, மலேயா, பர்மா முதலிய இடங்களில் தைரியமாகச் சண்டை செய்ததற்காக இந்தியத் துருப்புகளுக்குச் செய்யப்படும் மரியாதைகளையும் கவனிக்க வேண்டும். டங்கர்க், கிரீட், டொப்ரூக், முதலிய இடங்களில் பிரிடிஷ் சிப்பாய்கள் காட்டியுள்ள வீரத்தனத்தை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

### சிப்பாயின் வேலை.

சிப்பாயின் வேலை யென்னவென்று கவனிப்போம். எப்படியும் அவன் யுத்தத்திலீடுபட வேண்டியதுதான். அப்போது அவனுக்கு ஒருவித சௌக்கியமும் ஏற்படாதென்பதை கவனிக்க வேண்டும். நம்மில் சிலருக்கு சைனியத்தில் சிநேகிதர்கள் இருக்கலாம். சைனியத்தில் சேருவதற்குமுன் அவர்களை மிக கண்யமாக நினைத்திருப்போம். தற்போது சிப்பாயின் ஆடைகளை அணிந்ததால்மட்டில் அவர்களுக்கு ஏதாவது குறை வந்துவிட்டதா? ஒன்றுமில்லை. இவர்களைப் போலத்தான் மற்றவர்களும். மேலும் யுத்தத்திலீடுபடுகிறவர்களுக்குவிசேஷ கௌரவத்தையே காண்பிக்க வேண்டும். யுத்தத்திலீடுபடா நேரங்களில் சிப்பாய்களுக்கு உள்ள கஷ்டங்களையும் கவனிக்கவேண்டும். நமக்கெல்லாம் ஏதோ சில அலுவல்களிருக்கின்றன. அவை முடிந்ததும் வீட்டிற்குச் செல்லுகிறோம். அவர்களுக்கு அவ்விதம் கிடையாது. மேலும் மே, ஜூன் மாதங்களில் ஒரு சாதாரண கூடாரத்தில் வெய்யலின் அவஸ்தையைப் பொறுத்துக்கொண்டிருப்பதென்பதும் சாதாரணமல்ல. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிறிது ஓய்வைக் குறித்து நாம் பொருமைப்படக்கூடாது.

அடுத்தபடியாக, தற்சமயத்தில் சைனியத்தில் சேர்ந்திருப்பவர்கள் எப்பேர்ப்பட்டவர்களென்று பார்ப்போம். முன்னிருந்தவர்களுக்கும் இப்போதுள்ளவர்களுக்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. இதற்கு முன் சேர்ந்தவர்கள் யாவரும் சைனியத்தையே தகுந்த வாழ்க்கையாக அமைத்துக்கொண்டார்கள். புதிதாகச் சேர்க்கப்பட்ட சைனியத்தில் அப்பேர்ப்பட்டவர்களும் இன்னும் இதர வாழ்க்கையிலிருந்து வந்தவர்களுமிருக்கின்றனர். யுத்தம் முடியும்வரைதான் இவர்கள் சைனியத்திலிருப்பார்கள். இவர்களுக்கு அங்கே ஆதிக்கமும் உண்டு. இவர்கள் சொல்லுவதெல்லாம், "ஹிட்லர் சீக்கிரத்தில் ஒழிந்தால் என் சொந்த வேலையைப் பார்ப்பேன்" என்பதுதான். மதருஸுக்கு அருகிலிருக்கும் ஒரு படையில் வக்கீல்களும், மத சம்பந்தமான படிப்புள்ளவர்களும், கணக்குப்பிள்ளைகளும், பாங்கி குமாஸ்தாக்களும், ஸர்வேயர்களும், சிற்பிகளும், இன்ஜினியர்களும், டிரைவர்களும்(குடியானவர்களும்). தகர சுரங்க வேலைக்காரர்களும், கடைக்காரர்களும், வியாபாரிகளும் இருக்கின்றனர். தட்டுக்கெட்டுப்போய் சிப்பாயின் ஆடைகளை அணிந்ததால் கொள்ளைக்காரர்களாக மாறி பொதுஜனங்களை பயமுறுத்துகிருர்களென்று இவர்களை சொல்லலாமா? இவர்களில் சிலர் பிளிமத்தில்சண்டையிலீடுபட்டவர்கள். அந்த இடத்தில் விமானத் தாக்குதல் அதிகமேற்பட்டதென்பது யாவருக்கும் தெரியும். மற்ருெரு படையில் 60

சதவிகிதம் தேயிலேகூட அருந்தாதவர்களிருக்கின்றனர். இவர்களா பொதுமக்களுக்குத் தீங்குவிளேவிப்பார்கள். சட்ட திட்டம் என்பதைத் தெரியாதவர்கள்தான் ராணுவச் சட்டத்தைப்பற்றி தெரிந்து கொள்ளாமல் பேசுவார்கள். ராணுவச் சட்டதிட்டம் மிகக்கடுமையானது. அதுவும் யுத்த சமயத்தில் மிகமிகக் கடுமை. ஒரு தடவை ஒருவன் தவறு செய்தால் மறுபடி அவர்கள் அவ்வாறு செய்யாதவண்ணம் தண்டனே விதிக்கப் படுகிறது. இவைகளேப்பற்றி கதைகளே நாம் பத்திரிகைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். சிற்சில சமயங்களில் சில தவறுதல்களும் நேரலாம். ஆனல் சிப்பாய்கள் எல்லாரும் அப்படித்தான் என்றுஎண்ணக்கூடாது.

### சந்தோஷ வீரர்கள்.

இந்திய, பிரிடிஷ் சிப்பாய்களின் படங்களேப் பார்த்திருக்கலாம். அவர்கள் யாவரும் முகமலர்ச்சியுடனே தான் காணப்படுகின்றனர். அதைப் போல் ஜெர்மன், இதாலியச் சிப்பாய்களின் முகங்களில் அவ்விதம் சிரிப்பு கிடையாது. இதாலியர்களுக்கு சந்தோஷ சந்தர்ப்பமே கிடையாது. குழந்தைகளுடனும், பிராணிகளுடனும் பிரிடிஷ் சிப்பாய் உல்லாஸமாக இருப்பான். நான் சொல்லுவதெல்லாம் பொதுவான அம்சங்கள்தான்.

### ராணுவத்திற்கு நாம் கடமைப் பட்டிருக்கிறேம்.

ஆகவே ராணுவத்திலிருப்பவர்களின் பேரில் கொஞ்சம் அதிக தயாள குணமும் பகுத்தறிவும் காட்டவேண்டும். பொதுமக்கள் தான் அதிகத் தொந்தரவு செய்வது. உதாரணமாக விளேயாட்டுகளில் நன்ருக நடத்தப்படுகிறவன் மற்ற வாழ்க்கையிலும் அமைதியுடனே காணப்படுகிருன். ஆகவே ஒழுங்கு முறைக்கு அடங்கியவர்கள் எப்போதும் அடக்கமாகவே இருக்கின்றனர். மேலும் நன்றி என்பதை மறக்காமல் நமக்காகப் பாடுபட்டுவரும் பிரிடிஷ் இந்திய சிப்பாய்களுக்கு நன்றியுடன் நாமும் நடக்க வேண்டும் ஏனென்ருல் ஜப்பானியர் திடீரென்று இங்கே வந்து விடாமல் இச் சிப்பாய்கள் தான் செய்கின்றனர்.

---

# பிரிடிஷ் மக்கள் என்ன செய்கிருர்கள் ?

## குணதோஷ விசாரகர்களுக்கு ஒரு அமெரிக்கரின் பதில்.

(நியூ யார்க்கிலுள்ள " ஹெறால்ட் டிரிபியூன் " பத்திரிகையின் வாஷிங்டன் நிருபர், பெர்ட் ஆண்டிரூஸ் கேபிள் மூலம் அனுப்பிய செய்தி).

அச்சு நாட்டின் பிரசாரகர்களும், பிடிவாதமுள்ள அமெரிக்க ஆரும் படையைச் சேர்ந்தவர்களும் ‘பிரிடிஷ் ஏன்ன செய்து கொண்டிருக்கிருர்கள்’? என்று கேட்கிருர்கள். இக்கேள்விக்கு பிரிடனிலிருந்து வரும் விஷயங்களிலிருந்து நாம் சரியான பதிலேத் தெரிந்துகொள்ளக்கூடும்.

புதிதாக பிரிடனிலிருந்து வரும் விஷயங்கள் ‘எதிர் பிரசாரம்’ என்ற தலேயங்கத்தின் கீழ் வெளிவருவதில்லே. ஐக்கிய நேசதேசங்களில் இருக்கும், அயல் நாடுகளிலும் உற்பத்தி இலாகாவில் நடக்கும் நடவடிக்கைகள் தெரிந்த அமெரிக்கத் தலேவர்கள் அந்த விஷயங்கள் உண்மை என்று ஆதரிக்கிருர்கள்.

சமீபத்தில் நடந்த நியூ யார்க் பிரசங்கத்தில் பிரிடனின் யுத்த முயற்சியைப் பற்றி ஹாலிபாக்ஸ் பிரபு பேசினுர். அவ்விஷயங்களே அவர் அரைகுறையாகச் சொல்லவில்லே என்பதை யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பிரிடிஷ் தீவுகளிலிருந்து சமீபத்தில் வெளியாகியிருக்கும் சில விஷயங்கள் தெளிவுபடுத்துகின்றன. ஆனல் பிரிடன், அமெரிக்க விமானங்கள், டாங்கிகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளாமலிருந்திருந்தால் அமெரிக்காவின் படையெடுப்புகளுக்குப் போதுமான விமானங்களும், டாங்கிகளும் இருந்திருக்குமென்று அச்சுநாடுகள் பொய் பிரசாரம் செய்து வருகின்றன. இதற்கு ஹாலிபாக்ஸ் பிரபு தக்கபடி பதிலளிக்கவில்லே என்று தெரிகிறது.

### ஒரு பாம்பர் விமானம் தருவிக்கப்பட்டால் ஐந்து விமானங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

1941-ம் வருஷத்தில் பிரிடன் அயல் நாடுகளிலிருந்து வாங்கும் ஒவ்வொரு பாம்பர் அல்லது பைடர் விமானத்துக்கும் தூரக்கிழக்குப் போர்முனேகளான

லிபியா, ருஷ்யா, இன்னும் மற்ற இடங்களுக்கும் சுமார் ஐந்து விமானங்கள் வீதம் ஏற்றுமதி செய்திருக்கிறது. அப்படி அனுப்பிய வற்றில் டாங்கிகளின் எண்ணிக்கைதான் பாராட்டத்தக்கது. பிரிடிஷ் தீவுகளில் இறக்குமதி செய்யப் படும் ஒவ்வொரு டாங்கிக்கும் 15 வீதம் ஏற்றுமதி செயயப்படுகின்றன. ஜனவரி மாதமுடிவில ருஷ்யாவிற்கு அனுப்புவதாக பிரிடன் ஒப்புக்கொண்ட டாங்கிகளில் ஒன்றுதான குறைந்திருந்தது.

பிரிடிஷ் தொழிற்சாலைகளின் நிலைமை என்ன? ஏன் அவைகளெல்லாம் யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யக்கூடாது? என்று வீண் வதந்தி பேசுகிற வர்கள் வாதிக்கிறார்கள். ஆனால் விஷயங்கள் கீழ்க்கண்ட மாதிரி இருக்கின்றன. யுத்தம் ஆரம்ப முதல் படைகளுக்கு ஸப்ளை செய்யவேண்டிய எல்லாவித பொருள்களின் உற்பத்தியும் மிகவும் அதிகரித்திருக்கிறது. டங்கர்க் சம்பவத் திற்குப் பிறகு உற்பத்தி மும்மடங்கு அதிகரித்திருக்கிறது. ஹிட்லர்படையெடுக்க ஆரம்பித்தபொழுது இருந்ததைக் காட்டிலும் இப்போது பத்துமடங்கு அதி கரித்திருக்கிறது.

## கப்பல் கட்டுமிடங்களில் வேலை எவ்வாறு நடைபெற்று வருகிறது?

**யுத்தக் கப்பல்கள் :**—ஹிட்லர் யுத்தத்தில் இறங்குவதற்கு முந்திய வருஷத் தில் கடைசி மூன்று மாதங்களில் பிரிடனில் கட்டப்பட்ட கப்பல்களின் எண்ணிக் கையைக் காட்டிலும் நான்மடங்கு அதிகமான கப்பல்கள் 1941-ம் வருஷம் கடைசி மூன்று மாதங்களில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

**வியாபாரக் கப்பல்கள்:**—யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து வியாபாரக் கப்பல்கள் கட்டுவது இரண்டு மடங்கு அதிகரித்திருக்கிறது. சண்டைக் கப்பல்கள் தயா ரிப்பதற்காகத்தான் வியாபாரக் கப்பல் கட்டுவது குறைக்கப்பட்டது.

**ஆகாய விமானங்கள் :**—நவீன முறையில் ஆகாய விமானங்கள் தயாரிப்பதில் கஷ்டம் இருந்தபோதிலும், 1939-ம் வருஷம் கட்டப்பட்ட விமானங்களைக் காட் டிலும் 1941-ம் வருஷத்தில் மூன்று மடங்கு அதிகம் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

**வதந்தி :**—"யுத்தத்தில் நேரிடும் எச்செலவிற்கும் அமெரிக்காதான் பணம் கொடுத்து உதவுகிறது. ஆனால் பரிடன் போதுமான அளவு செலவு செய்கிற தில்லை."

**பதில் :**—வருஷாந்திர வருமானம் 25 லக்ஷக்கோடி (25 billions) டாலரில் யுத்தத்திற்காக 17 லக்ஷக்கோடி டாலர் வீதம் பிரிடன் செலவு செய்துவருகிறது. யுத்தத்திற்குமுன், 1938-ம் வருஷத்தில் பிரிடன் யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்வதற்காக தேச வருமானத்தில 40 சதவிகிதம் செலவு செய்தது. 1941-ம் வருஷத்தில் போர் சாமான்கள் தயாரிப்புக்காக வருமானத்தில் 60 சதவிகிதம் செலவாகியிருக்கிறது. மீதமுள்ள பெரும் இருப்புத் தொகைகளும் யுத்தப் பிரயத்தனத்திற்காகவே செலவு செய்யப்பட்டு வருகின்றன.

## ஏற்றுமதியின் நிலைமை.

**வதந்தி :**—"யுத்தம் நடந்துகொண்டிருக்கும் பொழுதுகூட பிரிடன் ஏற்று மதி வியாபாரத்தைக் குறைக்காமல் நடத்தி வருகிறது."

**பதில் :**—பிரிடனிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுவதில் பாதியளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. பிரிடனிலுள்ள தொழிலாளிகளில் 100-க்கு 3 பேர் கள்தான் ஏற்றுமதி பொருள்கள் உற்பத்தி செய்வதற்காக வேலையில் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

**வதந்தி :**—"வழக்கம்போல் பிரிடன் இன்னும் ஏராளமாக வியாபாரம் செய்து வருகிறது."

**பதில் :**—1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் மோட்டார்கள் செய்துவந்த பிரிடிஷ தொழிற்சாலைகளெல்லாம் யுத்த தளவாடங்கள் செய்வதற்கென்று ஒதுக்கப்பட்டுவிட்டன. வருஷத்திற்கு 20,00,000 ரேடியோக்கள் செய்து வந்த ரேடியோ தொழிற்சாலையில் அரசாங்கத்தாரின் உபயோகத்திற்கும், ராணுவ உபயோகத்திற்கும் 1,50,000 ரேடியோக்கள் மட்டில் இப்பொழுது

செய்யப்படுகின்றன. மற்றபடி அத்தொழிற்சாலையில் யுத்த தளவாடங்கள் செய்யப்படுகின்றன. விளையாட்டு சாமான்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலும்கூட 73 சதவிகிதம் யுத்தப் பொருள்கள் செய்வதில் ஈடுபட்டு இருக்கின்றன.

### கப்பற்படையின் வேலை.

வதந்தி :—“பிரிடிஷ் கப்பற்படை என்னவேலை செய்கிறது?”

பதில் :—ஐக்கிய அரசாங்கத்தைச் சேர்ந்த யுத்தக் கப்பல்கள் க்ரூயிஸர்கள், நாசகாரிகள், நீர்மூழ்கிகள் இவைகள் மட்டில் ஜெர்மனி, இதாலி இவைகளைச் சேர்ந்த மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களில் 86 சதவிகிதமும், நீர்மூழ்கிகளில் 89 சதவிகிதமும் அழிந்திருக்கின்றன. மத்தியக் கிழக்குப் போர்முனைக்கு மட்டில் 30,000 யுத்தத்திற்கு வேண்டிய யந்திர சாதனங்களையும், மற்றும் 10,00,000-டன் நிறையுள்ள ஸப்ளைகளையும் கொண்டு செல்வதற்கு பிரிடிஷ் கப்பற்படை பாது காப்பு வேலை புரிந்திருக்கிறது.

வதந்தி:—“அமெரிக்கா பிரிடனுக்கு அநேக விமானங்கள் அனுப்பியிருக்கிறது.”

பதில் :—பிரிடிஷ் தீவுகளில் தற்காப்பு வேலையில் ஈடுபட்டிருக்கும் விமானங்களில் 100-க்கு 89 பிரிடனில் செய்யப்பட்டவை. அயல் நாடுகளில் பிரிடனுக்கு ஜயம் பெற்றுவரும் விமானங்களில் 100-க்கு 75 பிரிடனில் தயாரிக்கப் பட்டவை. பிரிடிஷ் விமானப்படையில் போரில் இறந்தவர்களில் 100-க்கு 75 பேர்கள் ஐக்கிய அரசாங்கத்திலிருந்து வந்தவர்கள் தான்.

---

## பைடர் விமானப்படையின் முக்கிய நோக்கம். “மேலும், மேலும் தாக்குவது தான்.”

(விமானப்படைத் தலைவர் L. V. பிரேசர் எழுதியது).

சீதோஷ்ண நிலை சாதகமாக வந்ததால் 1942, வசந்த காலத்தாக்குதலை பிரிடிஷ் பைடர் விமானப்படை ஆரம்பித்துவிட்டது. விமானச் சண்டையிலேயே இதுதான் மிக மும்மரமாக நடைபெற்ற சண்டையாகும். ருஷ்யப் போர ரங்கத்தில் ஜெர்மன் லுப்ட்வாபி படை ஈடுபட்டிருக்கிறது. அதிலிருந்து பாதிப்படையை மேற்கே அனுப்பி பிரிடிஷ் விமானங்களுடன் சண்டை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே ருஷ்யாவிற்கு நேரோடி உதவி செய்யவேண்டுமென்ற பிரிடிஷ் பைடர் விமானப்படையின் நோக்கம் கை கூடிவருகிறது.

முன்பு பிரிடன் பேரில் நடந்த விமானப்போரின் போது எதிரிகளால் அனுப்பப்பட்ட விமானங்களைக் காட்டிலும் அதிகமாக ஒரே நாளில் பிரிடிஷ் விமானங்கள் ஈடுபட்டு ஐரோப்பாவில் நாஸி ஆக்கிரமித்த பிரதேசங்களில் படையெடுத்து வருகின்றன. இவ்விதம் செய்வதால் கப்பல்களுக்குக் காபந்து அளிப்பதிலோ, பிரிடன் பாதுகாப்பிற்கோ குறைவு ஏற்படவில்லை. இதுவே தற்போதுள்ள பைடர் விமானப்படையின் பலமாகும். ருஷ்யாவிற்கு உதவிக்கு அனுப்பாமலிருந்தாலும், கிழக்குப் பிராந்தியங்களில் நடந்த சண்டைகளில் ஈடுபடாமலிருந்தாலும் இன்னும் பிரமாதமான பலம் கொண்டிருக்கும்.

### படையெடுப்புக்கு லாயக்கான சீதோஷ்ண நிலை.

ஏப்ரல் மாதமே படையெடுப்புக்கு லாயக்காக இருந்தது. முதல் 21 நாட்களில் 14 தினங்களில் படையெடுப்புகள் செய்யப்பட்டன. இந்த தினங்கள் பெரும் வகையாக 40 தடவை தாக்குதல்கள் நேர்ந்தன. இவைகளில் 16 தடவைகளில் போஸ்டன் விமானங்களும், குண்டுகளேற்றிச் செல்லும் ஹரிகேன் விமானங்களும் சென்று எதிரி நாட்டில் விமான தளங்களையும், கப்பல் தளங்களையும், தொழிற்சாலைக் கட்டடங்களையும், ரயில்வண்டிகள் நிற்குமிடங்களையும் தாக்கின. இவைகளுக்கு உதவியாக ஸ்பிட் பையர் விமானங்கள் கூடச் சென்றன. “இந்த சந்தர்ப்பங்கள் கனமான குண்டுகளை ஏற்றிச் செல்லும் பெரிய பாம்பர் விமானங்களை ஏன் அனுப்பவில்லை” என்று கேட்கலாம். ஏனென்றால் பாம்பர்கள் வெகு தூரம் சென்று ஜெர்மனியில் உள்ள தொழிற்சாலைகளை இரவு காலங்களில் தாக்கு

வதற்கு உபயோகமாக இருக்கின்றன. பைடர் விமானங்கள் சிறிய தூரங்களுக்குத் தான் உபயோகமாகும்.

பைடர் விமானங்களில் ஸ்பிட் பையர் விமானங்கள் அதிகமாக ஈடுபட்டிருந்தன. ஆக்கிரமித்த நாடுகளில் லுப்ட்வாபியுடன் சண்டை செய்தே திரும்புகின்றன. இவைகள் திடீரென்று விமானுதிக்கத்தைப் பெற்றுவிடுகின்றன. மார்க் வீஸ் குண்டு தொழிற்சாலையை ஹரிகேன் பாம்பர்கள் தாக்கும்போது "சண்டை நடக்கவில்லை. எதிரி விமானங்களும் சண்டை செய்ய விரும்பவில்லை........." ருவனுக்கு அருகில் மின்சார யந்திரசாலையின் மேல் போஸ்டன் விமானங்கள் படையெடுக்கும்போது "எங்கள் விமானங்களைப் பார்த்ததும் எதிரி விமானங்கள் ஓடி விட்டன, சண்டையே நேரவில்லை........." அங்கே எல்லாம் எப்போதாவது தான் எதிரிகளுடன் சண்டை நேரும். நமது விமானப்படை எதிர் பார்க்கும் போதெல்லாம் சண்டை நேராது.

பிரிடன் மேல் நடந்த விமானப் போருக்குப் பிர்ப்பட்டு பைடர் படைக்கு அதிக விமான மாலுமிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்சமயம் எதிரி நாட்டில் செய்யப்படும் படையெடுப்புகளால் நமது மாலுமிகளுக்கு நல்ல அனுபவம் ஏற்படுகிறது. ஆகவே மேலும், மேலும், தாக்குவது தான் பைடர் விமானங்களின் லக்ஷியம்.

---

## அமெரிக்காவில் சாமான்களின் உற்பத்தி.

---

**(எட்வேர்டு மாண்ட்கோமரி எழுதியது).**

முக்கியமான போர்முனைகளில் முன்னேறிப் போர் நடத்துவதற்கான தந்திரங்களைப்பற்றி அமெரிக்காவில் திட்டங்கள் போடப்பட்டு வருகின்றன. அதோடு சாமான்களின் உற்பத்தியைக் குறித்தும் சரியாக திட்டங்கள் யோசிக்கப்பட்டு வருகினறன. மனித பலத்தைச் சேகரிப்பதும், சாமான்களை அதிகமாக உற்பத்தி செய்வதும்தான் முக்கியமாக கவனிக்கப்பட்டு வருகின்றன.

ஏதோ சில விவரங்களே கிடைத்திருக்கின்றன. இருந்தாலும் மொத்தத்தில் யுத்த சாமான்கள் மிக அதிகமாக செய்யப்பட்டு வருகின்றன. இதைப்பற்றி நியூயார்க்கில் ஒரு உத்தியோகஸ்தர் பேசும்போது, 1942-ல் உள்ள திட்டப்படி 50 விமானங்கள் கட்டப்படவேண்டிய இடத்தில் 84 விமானங்கள் முடிவாகிறதாகச் சொன்னார்.

### செலவு அதிகரிக்கிறது.

ஒரு விஷயத்தில் செலவாகும் பணத்தைக்கொண்டு ஒரு முடிவிற்கும் வர முடியாது. இருந்தாலும் ஏராளமாக சாமான்கள் செய்யப்படுகின்றனவென்று தெரிந்து கொள்ளலாம். ஜூன் மாதத்தோடு முடிவாகும் இவ்வருஷத்திற்குப் போட்ட உத்தேசச் செலவான 26 முதல் 28 லக்ஷக்கோடி டாலருக்கு 2 லக்ஷக் கோடி டாலர் அதிகமாகவே செலவு ஆகும். அடுத்த வருஷத்தில் 14 லக்ஷக் கோடி அதிகமாகும். இக்கணக்கு (உத்தேசக் கணக்கான) 56 முதல் 70 லக்ஷம் டாலருக்கும் அதிகம்.

இவ்விதக் கணக்குகளைக்கொண்டு பார்த்தால் சாமான்களின் உற்பத்தியில் இவ்வருஷம் 8 சத விகிதம் அதிகமாயும் அடுத்த வருஷம் 25 சத விகிதம் அதிகமாயும் காணப்படுகிறது. இந்தக் கணக்குகள் யாவும் மிகுத்திருப்திகரமாக இருக்கின்றன. ஆனால் இது போதாது. சில யுத்த சாமான்களை மாத்திரம் ஏராளமாக உற்பத்தி செய்து மற்றவைகளைக் கவனிக்காமலிருப்பது மிகவும் மோசமாகிவிடும்.

### கப்பற் தொழிற்சாலை.

கப்பற் தொழிற்சாலையில் அதிக முன்னேற்றமில்லையென்று ஜனாதிபதி சொல்லியிருக்கிறார். அதிகக் கப்பல்கள் தேவையான இந்த சமயத்தில் இத்தொழிலை கவனிக்காவிடில் அதிகம் பாதிக்கும். அட்லாண்டிக்கில் அதிகக் கப்பல்கள் நஷ்டமாகின்றன. பஸிபிக் யுத்தத்தால் கப்பல் கட்டும் சாமான்களும் கிடைக்கவில்லை. 1940-ல் விமானங்கள் போராமல் கட்டப்பட்டன. 1941-ல் டாங்கிகள் போராமல் கட்டப்பட்டன. 1942-ல் கப்பல்கள் போரவில்லை. அவைகளைக் கட்டவேண்டும்.

# விளம்பரம்.

இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்த

## ஸிவில் பாதுகாப்பு

என்ற ஒரு யுத்தப் படம்

(தமிழில்)

புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸில்

மே மீ 22உ முதல் 25உ முடிய காண்பிக்கப்படும்.

இப்படத்தை

புதுக்கோட்டை

தேசீய யுத்த முன்னணி நிலயம்

பொது ஜனங்களுக்கு சிபார்சு

செய்கிறது.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 96—(3-வது பிரிவு).

| 1942— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| மே | ...23, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலே | 6.30 |
| | 24, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... | ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு | ... | ,, | 6.30 |
| | 25, திங்கட்கிழமை ... | அன்னவாசல் | ... | ,, | 6.00 |
| | | கீழக்குரிச்சி | ... | ,, | 6.30 |
| | 26, செவ்வாய்க்கிழமை. | ராமச்சந்திரபுரம் | ... | ,, | 6.00 |
| | | ராயவரம் | ... | ,, | 6.30 |
| | 27, புதன்கிழமை ... | மழையூர் | ... | ,, | 6.00 |
| | | கரம்பக்குடி | ... | ,, | 6.30 |
| | 28, வியாழக்கிழமை ... | வாளரமாணிக்கம் | ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் | ... | ,, | 6.30 |
| | 29, வெள்ளிக்கிழமை... | பொ. புதுப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | வேந்தம்பட்டி | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 97—(4-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 30, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலே | 6.30 |
| | 31, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி | ... | ,, | 6.00 |
| | | ஆவூர் | ... | ,, | 6.30 |
| ஜுன் | ... 1, திங்கட்கிழமை ... | காரையூர் | ... | ,, | 6.00 |
| | | இடையாத்தூர் | ... | ,, | 6.30 |
| | 2, செவ்வாய்க்கிழமை | அண்டக்குளம் | ... | ,, | 6.00 |
| | | கிள்ளனூர் | ... | ,, | 6.30 |
| | 3, புதன்கிழமை ... | கீரனூர் | ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் | ... | ,, | 6.30 |
| | 4, வியாழக்கிழமை ... | வடவாளம் | ... | ,, | 6.00 |
| | | செம்மட்டிவிடுதி | ... | ,, | 6.30 |
| | 5, வெள்ளிக்கிழமை... | நார்த்தாமலே | ... | ,, | 6.00 |
| | | உப்பிலியக்குடி | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—26-5-42.